# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 28 சுபகிருது வருடம், ஆடி மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(29.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 29 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களை வைத்திருப்போரும் பதியலாம்!



பல வாகனங்களைக்கொண்ட வர்த்தகர்கள் தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டைப் பெறுவதற்கு வணிகப் பதிவு இலக்கத்துடன் அனைத்து வாகனங்களையும் பதிவு செய்யமுடியும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இயந்திரங்களுக்கான எரிபொருள் தேவைகள், வாராந்த எரிபொருள் தேவைகளுடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

## கோட்டாபயவை செல்லவிடாமல் தடுத்தோரை விசாரியுங்கள்!

டயானா கமகே எம்.பி. கோரிக்கை

02 பக்கம்

## நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு சர்வகட்சி அரசாங்கமே ஒரே வழியென்கிறார் மைத்ரி



•யோ.தர்மராஜ்

"நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதாரம் உள்ளிட்ட நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு சர்வகட்சி அரசாங்கத்தை தவிர வேறு மாற்று வழிகள் இல்லை. எனவே, நாட்டில் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இல்லையேல் நாளுக்கு நாள் நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும்" என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார். 02 பக்கம்

## வெளிநாட்டமைச்சர் சப்ரியை சந்தித்தார் சீனத் தூதுவர்



சீனத் தூதுவர் கி சென்ஹொங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி நேற்றுமுன்தினம் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் புதிய நியமனத்திற்கு தூதுவர் கி சென்ஹொங் ஆரம்பத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, சீன மாநில அவை உறுப்பினரும், வெளியுறவு அமைச்சருமான வாங் யீயின் வாழ்த்துச் செய்தியைக் கையளித்தார்.

இலங்கையும் சீனாவும் நீண்டகால இருதரப்பு மற்றும் பொருளாதார உறவுகளைக்கொண்ட பாரம்பரிய நட்பு நாடுகளாகும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கம் மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகள் உட்பட வலுவான இருதரப்பு உறவுகள் குறித்து இரு தரப்பினரும் மிகுந்த திருப்தியை வெளிப்படுத்தினர்.

இந்த சந்திப்பின்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் சீனத் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# ரணிலுடன் இணையும் மைத்ரி, விமல்!





### முக்கிய அமைச்சுகளை வழங்க ஆளுந்தரப்புக்குள் பேச்சு

### பிரதமர் பதவியில் மாற்றம் இல்லையென ஜனாதிபதி உறுதி

(அரசியல் செய்தியாளர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் இணைந்து ஆதரவை வழங்கி அமைச்சுப்பொறுப்புகளை ஏற்க முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோர் தயாராகியுள்ளதாக தெரியவருகிறது.

இதுதொடர்பில் பல சுற்றுப் பேச்சுகள் ஏற்கனவே நடந்துள்ளன. சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைத்து, அதில் அமைச்சுப் பொறுப்புகளை பெறுவதாயின் நிறைவேற்றப்படவேண்டிய... 02 பக்கம்

## சமூக ஆர்வலர் பெத்தும் கெர்னர் கைது



சமூக ஆர்வலர் பெத்தும் கெர்னர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அண்மையில் பத்தரமுல்ல பொல்துவவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

நேற்று மதியம் 12.30 அளவில் அவர் கைதுசெய்யப்பட்டதாக தல்துவ குறிப்பிட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் விசாரணைக்காக அங்கு சென்றிருந்த போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ரஞ்சனை விடுவிக்க அனைத்து ஆவணங்களும் தயார் நிலையில்!



ஜனாதிபதி கையெழுத்திட்டதும் விடுதலையாவாரென அமைச்சர் ஹரீன் தகவல்

02 பக்கம்

## எதிர்க்கட்சியில் அமரவும் தயங்கோம்!



### டலஸ் அணி அறிவிப்பு

02 பக்கம்

## அவசரகாலச் சட்ட அமுலாக்கம் பெரமுனவின் கட்சிக் கொள்கைகளுக்கு விரோதமானது!



### அதனாலேயே எதிர்த்து வாக்களிப்பென்கிறார் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ.எல்.பீரிஸ்

யோ.தர்மராஜ்

நாட்டு மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதற்கு சாதாரண சட்டத்திலும் ஏற்பாடுகள் உள்ளன. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அப்பால் தேவையற்ற விதத்தில் அவசரகால சட்டத்தை அமுல்படுத்துவதாயின், அதனூடாக வெவ்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 02 பக்கம்




நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அமர்வு நடந்தபோது ஆளாளுக்கு ஒரே பேச்சு அமைச்சுப் பதவிகளை பெறுவது பற்றித்தானாம். மீன்பிடி அமைச்சு உட்பட பல முக்கிய அமைச்சுகளைக் கேட்க தயாராகியுள்ளதாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

அதேபோல் விமலுக்கும் முக்கிய அமைச்சொன்றை வழங்க ஆலோசனை செய்யப்படுகிறதாம்.

## பாடசாலை மாணவர்களுக்காக புதிய பஸ் சேவையை முன்னெடுக்கத் திட்டம்

### ஒகஸ்ட் முதலாம் திகதிமுதல் ஆரம்பம்

02 பக்கம்

## மக்காச்சோள பற்றாக்குறையால் திரிபோஷா உற்பத்தியில் தடை




02 பக்கம்

## ஆடி அமாவாசை விரதம் வீதியில்!

- யாழ்.செய்தியாளர் -

எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் முடித்துக்கொண்ட புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசையான நேற்றைய தினம், தந்தைக்காக விரதம் இருந்து, காலமான தந்தைக்கு... 02 பக்கம்



## கமெண்ட் கந்தர்..

ஸ்ரீலங்கா பொலிஸ் செய்யுற கைதுகள பார்த்து, அர்ஜுன மகேந்திரன் கொடுப்புக்குள்ளால சிரிப்பாரா இருக்கும் என்னங்கோ...



# ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் மீளத் திறப்பு!







(திராய்க்கேணி நிருபர்)

எம்.எச்.எம்.அஷ்ரப் ஞாபகார்த்த ஒலுவில் மீன்பிடித் துறைமுக மீள் செயற்பாட்டு நிகழ்வு நேற்று (28) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அங்கு அமைச்சர் உரையாற்றியபோது, எதிர்காலத்தில் இப்பிரதேச மக்கள் இதன் மூலம் தொழில்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கப்படும் எனவும், இலகுவாக மீன்பிடிக்கக்கூடிய பொறிமுறைகளை விரிவுபடுத்த முடியும் எனவும் கூறியதுடன், இப்பிரதேச மக்கள் மீன்களை இலகுவாக பெறக்கூடிய வாய்ப்பும் அதிகரிக்கப்படும் எனவும் கூறினார்.

ஒலுவில் மீன்பிடித் துறைமுகமானது 2007ஆம் ஆண்டு அப்போது துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சராக இருந்து மறைந்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் பெரு முயற்சியினால் அமையப்பெற்றது.

ஒலுவில் துறைமுகமானது ஒரு பக்கம் வர்த்தகத் துறைமுகமாகவும் மறுபக்கம் மீன்பிடித் துறைமுகமாகவும் இரு பயன்பாடுகளைக்கொண்டதாக அமையப் பெற்றதாகும். இந்தத் துறைமுகமானது காலத்திற்கு காலம் கடலரிப்பு மற்றும் மணல் நிறைதல் போன்ற காலநிலை சவால்களை எதிர்கொண்டபோதும் அதை முறையாக பராமரிப்பதில் இருந்த குறைபாடுகள் காரணமாக துறைமுகப் பகுதியில் மணல் நிறைந்து துறைமுக வாயில் மூடப்பட்டதால் பல வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில், இத்துறைமுகத்தை நம்பியிருந்த பலநாள் படகுத் தொழிலை செய்துவந்த கடற்றொழிலாளர்கள் காலநிலைக்கேற்ப தமது படகுகளை வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் தரித்து பாதுகாக்கும் நிலையே இருந்துவந்தது.

அதனால் பல்வேறு நடைமுறை சார்ந்த இடர்களையும் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டனர்.

இந்நிலையில் ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் ஆழப்படுத்தியும் அங்கு கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான அத்தியாவசிய வசதிகளையும் செய்துதந்து கடற்றொழிலை நம்பியிருக்கும் குடும்பங்களின் வாழ்க்கையை பாதுகாத்துத் தருமாறும் அத்துடன், இத்துறைமுகத்தின் ஊடாக நாட்டுக்குப் பெருமளவு வருமானத்தையும் ஈட்ட முடியும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பல தரப்பாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த அமைச்சைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து அயராது எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக ஒலுவில் துறைமுகத்தின் வாயில் பகுதி தேவையான அளவு ஆழமாக்கப்பட்டு நேற்று மீண்டும் கடற்றொழிலாளர் பாவனைக்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஒலுவில் துறைமுகத்தை பெருங்கனவோடு அமைத்த மறைந்த முன்னாள் அமைச்சர் அஷ்ரப்பின் நினைவை பிரதிபலிக்கும் வகையில் ஒலுவில் துறைமுகத்திற்கு 'அஷ்ரப் ஞாபகார்த்த ஒலுவில் மீன்பிடித் துறைமுகம்' என்று புதிய பெயர் சூட்டப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது. இதனையடுத்து பல படகுகளை ஒலுவில் துறைமுகப் பகுதியிலேயே தரித்து நிற்கச் செய்வதுடன், துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள ஐஸ்கட்டித் தொழிற்சாலை மற்றும் ரின்மீன் தொழிற்சாலை என்பன மீளவும் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன், படகு திருத்தப்பணிகளை மேற்கொள்ளவும், படகு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்னாயக்க மற்றும் ஒலுவில் பலநாள் மற்றும் ஒருநாள் படகு உரிமையாளர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியாக சாகல ரத்நாயக்க நியமனம்



ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியாக நியமிக்கப்பட்ட சாகல ரத்நாயக்க, நேற்று (28) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

# ஹிந்தகொட ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் துப்பாக்கிச்சூடு



(பதுளை நிருபர்)

பதுளை - பசறை பிரதான வீதியில் ஹிந்தகொடவில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று(28) இடம்பெற்றுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பெருமளவிலான பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியருக்கும், விஹாரகொடயிலிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வந்த நபருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த் தகராறினால், அந்நபர் தாம் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கி, நான்கு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

எரிபொருள் நிலைய ஊழியர்களை பயமுறுத்தும் பொருட்டே மேற்படி துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். எவருக்கும் எதுவிதமான காயங்கள் ஏற்படாத போதிலும், சந்தேக நபரை கைதுசெய்யும் முகமாக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரொக்கில் காளியம்மன் தேவஸ்தானத்தில் முதலாம் திகதி ஆடிப்பூர பெருவிழா

(பதுளை நிருபர் )

பதுளை, ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஆடிப்பூர பெருவிழா வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஸ்ரீ காளியம்மனுக்கு விசேட அபிஷேகம், சங்காபிஷேகம் உள்ளிட்டு வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்று, அம்மனுக்கு ருது சோபன நிகழ்வு நடைபெறும்.

அதைத்தொடர்ந்து ஸ்ரீ காளியம்மன் அலங்கரிக்கப்பட்ட சிங்க வாகன பீடத்தில் எழுந்தருளி, உள்வீதி மற்றும் வெளி வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். இறுதியில், அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மேற்படி விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும், தேவஸ்தான பரிபாலன சபையினர் துரிதமாக மேற்கொண்டுள்ளனர்.

# இரத்மலானையில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம்; இளைஞரொருவர் உயிரிழப்பு

இரத்மலானை, சில்வா மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த இருவர், மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று(28) அதிகாலை வீட்டிற்குள் நுழைந்து துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட குறித்த இருவரும் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச்சூட்டில் 30 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்த இளைஞரின் மனைவியும் வீட்டிலிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேகநபர்கள் இதுவரை அடையாளங்காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு ரிதிதென்னயில் தன்னை கடத்தி கட்டிவைத்ததாக நாடகமாடிய விமானப்படை வீரர்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ரிதிதென்ன பகுதியில் விடுமுறைக்கு வீடு சென்று திரும்பிய விமானப்படைவீரர் ஒருவர் கடன் பிரச்சினை காரணமாக தன்னைத்தானே காட்டுப் பகுதியில் கட்டிவைத்து நாடகமாடியுள்ள சம்பவம் நேற்று (28) இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

ரிதிதென்னை பகுதியில் நேற்று (28) காலையில் வீதி சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் ரிதிதென்ன பொலிஸ் சோதனைச் சாவடியிலிருந்து சுமார் 500 மீற்றர் பிரதான வீதியிலுள்ள செங்கல்வாடி ஒன்றுக்கு அருகில் உள்ளாடையுடன் விமானப்படை வீரரொருவர் மரத்தில் கட்டப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டு, அவரை மீட்டு உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அவர் கட்டப்பட்டிருந்த மரத்தில் முரட்டு அரசியலுக்காக உதவும் கைக்கூலிகள் இப்படித்தான் கொல்லப்படுகின்றார்கள் என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகையும் தொங்கவிடப்பட்டிருந்ததாக தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த விமானப்படை வீரரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் மட்டக்களப்பு விமானப்படை படை முகாமில் கடமையாற்றும் வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ரத்தினசூரிய முதியன்சலாவே என்ற விமானப்படை வீரர் விடுமுறைக்காக வீடுசென்று, மீண்டும் நேற்று முன்தினம் புதன்கிழமை (27) காலை ஹட்டன் பஸ்நிலையத்திலிருந்து மஹியங்கனைக்கு செல்லும் பஸ்ஸில் பயணித்து மாலை 3.15 மஹியங்கனையை வந்தடைந்துள்ளார்.

பின்னர் அங்கிருந்து பொலன்னறுவை பஸ்ஸில்பயணித்து செவனப்பிட்டி மட்டக்களப்பு சந்தியை மாலை 6.30 வந்தடைந்துள்ள நிலையில், மட்டக்களப்பு செல்வதற்காக செவனப்பிட்டி சந்தியில் காத்திருந்தபோது, பின்னால் தனியார் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாதோர் தனது தலையில் தாக்கி, தனது முகத்தை மூடியதாகவும் பின்னர் தன்னை அந்த வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சுமார் 2 மணித்தியாலத்திற்குப் பின்னர், ரிதிதென்ன பொலிஸ் சோதனைச்சாவடியிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியிலுள்ள செங்கல்வாடி ஒன்றுக்கு அருகில் அவரின் ஆடைகளை கழற்றி உள் ஆடையுடன் காலையும் கையையும் கயிற்றால் கட்டி மரத்துடன் கட்டப்பட்டதுடன், அந்த மரத்தில் ''முரட்டு அரசியலுக்காக உதவும் கைக்கூலிகள் இப்படித்தான் கொல்லப்படுகின்றார்கள்'' என பதாகையையும் தொங்கவிடப்பட்டு தப்பி ஓடியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து சம்பவ இடத்திற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி சென்று சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டதுடன், குறித்த விமானப்படை வீரர் தனக்கு இப்படித்தான் நடந்ததாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சம்பவத்தில் படைவீரருக்கு எதுவிதமான அடிகாயங்களும் இல்லாததையடுத்து அவர்மேல் ஏற்பட்ட சந்தேகத்தினையடுத்து மீண்டும் குறித்த விமானப்படை வீரரிடம் மேற்கொண்ட விசாரணையில் அவர் கையடக்கத் தொலைபேசியில் கேம் விளையாட்டு ஒன்றில் அதிக பணத்தை இழந்துள்ளதாகவும் முகாமில் சக படைவீரர்களிடம் கடனாக பணம் வாங்கி அந்த கேம் விளையாட்டில் இழந்ததையடுத்து கடனாளியாகியுள்ளார்.

எனவே, இதற்கு தீர்வு காண்பதற்காக தான் செவனப்பிட்டி கடை ஒன்றில் பிரிஸ்டல் போட் மற்றும் மாக்கர் வாங்கியதுடன், வேறு கடையில் கயிறு ஒன்றையும் வாங்கிக்கொண்டு ரிதிதென்ன பொலிஸ் சோதனைச்சாவடியை தாண்டி மட்டக்களப்பு பிரதான வீதியில் இறங்கி வீதியில் ஆள்நடமாட்டம் அற்ற அந்தப் பகுதிக்கு சென்று பிரிஸ்டல் போட்டில் எழுதி தொங்கவிட்டுவிட்டு, பின்னர் உடைகளை கழற்றிவிட்டு உள் ஆடையுடன் தன்னைத்தானே கயிற்றால் கட்டிக்கொண்டு இந்த நாடகமாடியுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்து, அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள் கையளிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) மன்னார் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 400 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 2500 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன.

நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று (28) மதியம் நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

நானாட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் அறுகம்குன்று பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 18 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 12 குடும்பங்களுக்கும், காயக்குழி மற்றும் முள்ளிக்குளம் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட மிகவும் வறிய 18 குடும்பங்களுக்கும், மருதமடு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.



மன்னார் மாவட்ட சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில், பணியாளர்கள் குறித்த கிராமங்களுக்குச் சென்று குறித்த கிராம பிரதிநிதிகளுடன் இணைந்து நிவாரணப் பொதிகளை வழங்கிதனர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கூலித்தொழில் மேற்கொள்ளும் குடும்பத் தலைவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், குறித்த கிராமங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டுள்ளதோடு, தெரிவுசெய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கக் கோரி தென்கிழக்குப் பல்கலை ஒலுவில் வளாகத்தில் ஆர்ப்பாட்டம்







காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டு, கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரி நேற்று(28) இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட, தொழில்நுட்பவியல் மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், அண்மையில் காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டு கைதுசெய்யப்பட்ட தனிஷ் அலி உள்ளிட்ட ஏனைய மாணவர்களை விடுவிக்கக் கோரியே இது முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்களால் தற்போதைய அரசாங்கம் செல்லும் அரசியல் ஸ்திரத்தன்மையை கோஷங்கள் மூலம் எடுத்துரைத்ததுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

அத்துடன், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களை இரவுநேரங்களில் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று கைதுசெய்வதை தடுக்கவேண்டும் எனவும் கோஷங்கள் பல முன்வைக்கப்பட்டன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூலை 29ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# கட்டுப்படுத்த வேண்டிய ரணிலின் அதிகாரம்!

நாடாளுமன்றத்தில் ரணிலின் அரசு தனது ஸ்திரநிலை என்னவென்பதை நேற்று முன்தினம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பலப்பரீட்சையில் நிரூபித்துவிட்டது.

இந்த யதார்த்தப் புறநிலையை கருத்தில் வைத்துக்கொண்டுதான் ரணில் அரசுக்கு எதிரான தங்களது சாம, பேத, தான, தண்ட அணுகல் முறைகளை எதிரணிகள் இனி முன்னெடுக்கவேண்டியிருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷவும் கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதிப் பதவியைத் துறப்பதற்கு முன்னர், இந்த ஆண்டில் இரண்டு தடவைகள் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்.

ஆனால், அவை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வரவுமில்லை, வாக்கெடுப்புக்கு விடப்படவுமில்லை.

நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காமலேயே – மக்கள் பிரதிநிதித்துவத்தை எதிர்கொள்ளாமலேயே – அதற்குத் திராணியில்லாமலேயே இந்த அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, பதினான்கு நாட்களில் அது தானாகவே காலாவதியாகும் தந்திரோபாயத்தை கோட்டா ஆட்சிப் பீடம் மேற்கொண்டது.

ஆனால், ரணில் அப்படிச் செயற்படவில்லை. தான் அதிகாரத்துக்கு வந்ததும், எழுந்திருந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வந்த உடனேயே அவரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார். அதை காலதாமதப்படுத்தாமல், நாடாளுமன்றைக் கூட்டி, அதன் முன் சமர்ப்பித்து, நாடாளுமன்ற அனுமதியையும் பெற்றிருக்கின்றார்.

அவசரகாலச் சட்டவிதிகளுக்கு ஆதரவாக – ரணில் அரசின் நடவடிக்கையை அங்கீகரித்து 120 எம்.பிக்களும், எதிர்த்து 63 எம்.பிக்களும் வாக்களித்திருக்கின்றனர். சபாநாயகர் உட்பட 41 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இந்த வாக்கெடுப்பில் ரணில் அரசுக்கு ஒரு செக்மேட் வைக்க எதிரணி திட்டமிட்டதாயினும், நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணித எண்ணிக்கையில் தமது நிலைமை என்ன, ரணில் அரசின் பலம் என்ன, பலவீனம் யாது என்பதை நாடாளுமன்ற வாக்கெடுப்பு இரு தரப்பினருக்கும் நன்கு உணர்த்தியிருக்கும் என்பது தெளிவு.

ஜனாதிபதி தெரிவில் பெரும் கண்டத்தை தாண்டிய ஜூனியர் ஜே.ஆர்., இப்போது அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றி மற்றுமொரு கண்டத்தை தாண்டியிருக்கிறார்.

ஜனாதிபதி தெரிவில் ரணிலுடன் டீல் முடித்த பலர், அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்து மக்களை மாங்காய் மடையர்களாக்கி விட்டதாக நினைத்துக்கொண்ட துயரமும் நடந்தேறியதை அவதானிக்க முடிந்தது.

வாய்ச்சவடால் விட்டாலும் விமல் அணி ரணிலுக்கு பயந்தே அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. டலஸ் அணி வராவிட்டாலும் அது ரணிலுக்கான மறைமுக ஆதரவே. இடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை யாரும் விலைக்கு வாங்க முடியாதென செல்வம் அடைக்கலநாதன் பேசியமை பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்த்தது.

அவசரகாலச் சட்டம் நிறைவேறியுள்ளதால் அநேகமாக காலிமுகத்திடல் முதல் ரூபவாஹினிவரை நடந்த போராட்டங்களில் பங்கேற்ற பலர் அடுத்தடுத்த நாட்களில் கூண்டோடு கைதாகுவர் என்று கட்டியம் கூறலாம். அடுத்த 9ஆம் திகதி போராட்டம் நடத்த கொழும்புக்கு மக்கள் வருவார்கள் என்று பொன்சேகா நாடாளுமன்றத்தில் கூறினாலும் அன்றையதினம் அல்லது அதற்கு முதல்நாள் கொழும்புக்கு வரும் பிரதான பாதைகளை இழுத்து மூடிவிடுவார்கள். அதுதான் ஜே.ஆர் காலத்து ஸ்டைல்.

நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்ற அதிகாரம் கையில் இருந்தாலும் இப்போதைக்கு ரணில் தேர்தலொன்றுக்கு செல்லமாட்டார். தேர்தல் வைக்கும் காலம் வந்தாலும் நாடாளுமன்ற அதிகாரத்துடன், ஏதோ ஒருவகையில் ஆட்சியை நீடித்துக்கொள்வார் என்பது அவரது நடவடிக்கைகளில் தெரிகிறது. அவற்றுக்கெல்லாம் எதிராக போராடக்கூடிய ஜனநாயகவிரும்பிகள் எவரும் அப்போது இருப்பார்களா என்பது தெரியவில்லை.

மொட்டுக் கட்சியினரைப் பெரும்பான்மையாகக்கொண்ட இந்த நாடாளுமன்றம், மக்கள் ஆணையை – செல்வாக்கை இழந்துவிட்டது என்ற வாதத்தை ஒரு கோஷமாக வைத்துக்கொண்டு, இந்த நாடாளுமன்றத்தை எவ்வளவு தூரம் சாதகமாகக் கையாளலாம் அல்லது அரகலய போன்ற போராட்டங்களை நாடாளுமன்றத்துக்கு எதிராக உசுப்பேற்றிவிட்டு விடயங்களைக் கையாளலாமா என்பதை எதிரணித் தலைவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

எது, எப்படியோ முதல் சுற்றில் - முதல் ரவுண்டில் தனது உறுதியான நிலையை - ஸ்திரத்தை ரணிலின் அரசு நிலைநிறுத்திக்கொண்டு விட்டது என்பதுதான் கள யதார்த்தம்.

சர்வகட்சி அரசு அமைப்பதற்கு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கக்கூடிய அழைப்பையும் கூட, நாடாளுமன்றத்தின் இந்தப் பின்புல எண்ணிக்கைப் பலத்தைக் கவனத்தில் வைத்துக்கொண்டுதான் எதிர்க்கட்சிகள் ஊடாட வேண்டியிருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கடும்போக்கை தளர்த்தி ரணிலுடன் பேச்சு நடத்த முன்வந்திருப்பது அக்கட்சித் தலைவர் மைத்ரியின் அரசியல் பக்குவத்தைக் காட்டுகின்றது.

நாடு எதிர்கொள்ளும் மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வகட்சி அரசு அவசியமானதே. அந்தத் கருத்தியலில் அதனை அணுகாமல் தனிப்பட்ட அரசியலுக்கான பலப்பரீட்சையாக அதனை எதிரணிக் கட்சிகள் அணுகுமானால் அது நாட்டுக்குப் பெரும் பின்னடைவாகும். இப்போதைய கொழும்பு அரசியலில் ஜனாதிபதி ரணிலின் கை ஓங்கியிருக்கிறது. அது இரும்புக்கரமாக செயற்படாமல் இருக்கவேண்டுமாயின், சர்வகட்சி ஆட்சியொன்றின்கீழ் அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு அந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும்வகையில், ரணில் தான்தோன்றித்தனமாக செயற்படுவதை தடுத்து நிறுத்த முயற்சிக்க வேண்டும்.இல்லையேல் பெரும் விபரீதங்கள் வந்துவிடலாம்.

# இலங்கையின் தலையெழுத்தை மாற்றிய இலங்கை – இந்திய ஒப்பந்தம்!



(இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் 35 வருடங்கள் நிறைவு என்பதால் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)

ஜூலை மாதத்துக்குள் இலங்கையின் இனப் பிரச்சினையின் வரலாற்றில், திருப்புமுனைகளாகக் கருதப்படவேண்டிய இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி தொடக்கம் சுமார் ஒரு வார காலமாக நாட்டின் பல பகுதிகளில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்செயல்கள் அதில் ஒன்றாகும்.

1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி, அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் எனப் பரவலாக அழைக்கப்படும் ஒப்பந்தம் மற்றையதாகும்.

இவற்றை, இலங்கையின் இனப் பிரச்சினையின் வரலாற்றில் மட்டுமல்லாது, முழு நாட்டினது வரலாற்றிலும் திருப்புமுனை களாகவே கருதவேண்டியுள்ளது. அவை அன்று இடம்பெறாவிட்டால், இன்று நாட்டின் நிலைமை என்னவாக இருக்கும் என்று ஊகித்துப் பார்த்தால், அவை உண்மையாகவே திருப்புமுனைகள் என்பது புலனாகும்.

கறுப்பு ஜூலை என்றழைக்கப்படும் 1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரமானது, இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் நேரடித் தலையீட்டை வரவழைத்தது.

இந்தச் சம்பவம் இடம்பெறாவிட்டாலும், அன்றைய இலங்கை அரசாங்கத்தின் சில கொள்கைகளால் இந்தியத் தலையீடு ஏற்படும் அபாயம் இருந்துவந்துள்ளது.

ஏனெனில், அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்தன, அமெரிக்க, பாகிஸ்தான் சார்பான கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தார். அமெரிக்காவுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்த சோவியத் ஒன்றியத்துடன் அப்போது இந்தியா இணைந்து செயற்பட்டு வந்தது.

இந்நிலையில், ஜெயவர்தனவின் கொள்கை, பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இதனால் இந்தியா, ஜெயவர்தனவுக்கு பாடமொன்றைக் கற்பிக்கத் தருணம் பார்த்துக்கொண்டு இருந்தது.

ஜூலை இனக் கலவரம், இந்தியாவுக்கு அதற்கான வாய்ப்பை வெகுவாக ஏற்படுத்திக் கொடுத்தது. அன்று அந்தக் கலவரம் இடம்பெறாதிருந்தால், இந்தியத் தலையீடு சிலவேளை வேறுவிதமாகத்தான் அமைந்திருக்கும். அது நாட்டின் வரலாற்றுப் பயணத்தை வேறு திசையில் திருப்பியிருக்கும்.

இரண்டாவது, திருப்புமுனைச் சம்பவமான இலங்கை – இந்திய ஒப்பந்தம், நேரடியாகவே இந்தியாவுடன் தொடர்புடையது என்பது அதன் பெயரிலேயே தெளிவாகிறது.

ஒருவகையில், இதுவும் அமெரிக்கா – சோவியத் ஒன்றியம் ஆகிய நாடுகளிடையே, நிலவிவந்த பனிப்போரின் விளைவு என்றும் கூறலாம். அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினை, இந்தியாவுக்கும் ஒரு பிரச்சினையாக மாறி வந்ததன் விளைவு என்றும் கூறலாம்.

தமிழ்த் தலைவர்கள், குறிப்பாக, தமிழ் ஆயுதக் குழுக்கள், அதிலும் குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளால் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில், நழுவவிடப்பட்ட ஒரு முக்கியமான சந்தர்ப்பம் என்றும் கூறலாம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தமானது, பல தமிழ்த் தலைவர்கள் அன்று நினைத்ததைப் போல் இந்தியா, இலங்கைத் தமிழ் மக்கள் மீது கொண்ட பரிவின் காரணமாக மேற்கொண்ட ஒரு நடவடிக்கையல்ல. அது, இந்தியா, தமது நலனைக் கருத்தில் கொண்டு மேற்கொண்ட நடவடிக்கையாகும்.

மேலே கூறப்பட்டதைப்போல், ஒருபுறம் இந்தியாவுக்குத் தமது அணியான சோவியத் அணியின் சார்பில் இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தவும் தண்டிக்கவும் அவசியம் ஏற்பட்டிருந்தது.

மறுபுறத்தில் வடக்கு, கிழக்கில் அரச படைகளுக்கும் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே இடம்பெற்றுவந்த மோதல்கள் காரணமாக சுமார் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள், இந்தியாவுக்குச் சென்றிருந்தனர். இதன் காரணமாக தமிழ்நாடு, இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் கொதித்துக்கொண்டிருந்தது. இதனால், தமிழ்நாட்டின் தமிழ் உணர்வுகள், இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எதிராகத் திரும்பும் அபாயமும் அப்போது ஏற்பட்டிருந்தது. இந்த இரண்டும்தான், இந்திய அரசாங்கம் அன்று, இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கான காரணங்களாக அமைந்தன.

அதற்கு, இலங்கை அரசாங்கமும் துணை போனதாகவே கூறவேண்டும். இலங்கை மீதான தமது கட்டுப்பாட்டை இந்தியா வைத்துக்கொண்டு, இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தவும் முயற்சி செய்தது. அதற்காகத்தான் இந்திய அரசாங்கம் 1985ஆம் ஆண்டு, இரு சாராருக்கும் இடையே முதன்முதலில், பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்தது.

ஆனால், பேச்சுவார்த்தையின்போது, இலங்கை அரசாங்கமோ தமிழ்க் குழுக்களோ நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. அப்போது பெரும்பாலான தமிழ் ஆயுதக் குழுக்கள், மாக்ஸியத்தை ஏற்றுக் கொண்டிருந்தமையால், மாக்ஸியத்தின்படி, தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதையும் அந்த இனத்துக்குப் பிரிந்து செல்லும் உரிமை இருக்கிறது என்பதையும் நிரூபிப்பதே தமிழ்க் குழுக்களின் நோக்கமாக இருந்தது. அதனால், இலங்கை அரசாங்கத்தோடு எவ்வித இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள அவை விரும்பவில்லை.

ஜெயவர்தனவின் தலைமையிலான இலங்கை அரசாங்கமும், இந்திய நெருக்குவாரத்தின் காரணமாக பேச்சுவார்த்தைக்கு சென்றதேயல்லாமல், பேச்சுவார்த்தையின்போது, எவ்வித இணக்கப்பாட்டையும் அடையவேண்டும் என்ற நோக்கம் அதற்கு இருக்கவில்லை.

எனவே, ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்பதிலேயே அரசாங்கப் பிரதிநிதிகள் உறுதியாக இருந்தனர். இந்த நிலைமை காரணமாக திம்புப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறவில்லை.

ஆனால், இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தின் மீது செலுத்திய நெருக்குவாரத்தின் காரணமாக 1986ஆம் ஆண்டு அரசாங்கம், அரசியல் கட்சி மாநாடு என்ற பெயரில் சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டியது.

அதன்போதுதான், முதன்முதலில் இலங்கை அரசாங்கம் அதிகாரப்பரவலாக்கல் என்ற எண்ணக்கருவைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டது. ஆனால், வடபகுதியில் போரும் தொடர்ந்தது. இதனால் தமிழ்நாடு கொந்தளித்துக்கொண்டே இருந்தது. எனவே, போரை நிறுத்த அல்லது தணிக்க, இந்தியா ஏதாவது செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அதன்படி, போரை நிறுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் வகையில், 1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி, இந்தியா, இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றியே தமது கடற்படையினர் மூலம் வடபகுதிக்கு உணவுப்பொருட்களை அனுப்பியது.

இது இரண்டு நோக்கங்களைக்கொண்டதாக அமைந்தது. முதலாவதாக, இலங்கை அரசாங்கத்துக்கு விடுத்த எச்சரிக்கையாகும். மறுபுறத்தில், தமிழ்நாட்டைத் திருப்திப்படுத்தும் வகையிலான அச்சுறுத்தலாகவும் இருந்தது. எனினும், இலங்கைக் கடற்படையினர் அந்தக் கப்பல்களை இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் நுழைய இடமளிக்க வில்லை. அவை திரும்பிச் சென்றன.

ஆனால், ஓரிரு நாட்களில் இந்திய விமானங்கள், திடீரென யாழ்ப்பாண வான்பரப்பில் தோன்றி, உணவுப் பொட்டலங்களை ஆங்காங்கே போட்டுவிட்டுத் திரும்பிச் சென்றன. இது, தமிழ் மக்களுக்கு உணவு வழங்கும் தேவைக்காக செய்த காரியமல்ல; இலங்கை அரசாங்கத்துக்குச் சவால் விடுப்பதும், இலங்கை அரசாங்கத்தை மிரட்டுவதுமே அதன் நோக்கமாகியது.

அது பலன் தந்தது. மாகாண சபைகளை உருவாக்கவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் 'தற்காலிகமாக' இணைக்கவும் அந்த விடயங்கள் அடங்கிய ஓர் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடவும் இலங்கை அரசாங்கம் இணங்கியது. 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட அந்த ஒப்பந்தம்தான் இலங்கை – இந்திய ஒப்பந்தமாகும்.

சுமார் 40 நாட்களுக்கு முன்னர், இந்திய உணவுக் கப்பல்கள் வடபகுதிக்கு வந்தபோது, தமது கட்டுப்பாட்டில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களைக்கொண்டு, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தச்செய்த, அப்போதைய அமைச்சர் காமினி திஸாநாயக்கவே, இந்த ஒப்பந்தத்தை நியாயப்படுத்துவதில் முன்னணியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, நிர்ப்பந்தத்தின் காரணமாக இந்த ஒப்பந்தத்தை ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்வதாகக் கூறினாலும், ஓரிரு வாரங்களிலேயே அவ்வமைப்பு அதற்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கியது.

ஆனால், அதுவரை தனித் தமிழ் நாடொன்றுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய ஏனைய தமிழ்க் குழுக்கள், இந்திய அதிகாரிகளின் முன்னிலையில் ஆயுதங்களை இலங்கை அரச அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு, தனி நாட்டுக்கான போராட்டத்தையும் கைவிட்டன. அதன்படி, தமிழீழத்துக்கான போராட்டமும் ஆயுதப் போராட்டமும் புலிகளின் ஏகபோக உரிமையாக மாறின. இந்த ஒப்பந்தத்தோடு, இலங்கையில் தனித் தமிழ் நாட்டுக்கான இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் நின்றுவிட்டது. உண்மையிலேயே அதற்கு முன்னரும் இந்தியா, இலங்கை அரசாங்கத்தை அச்சுறுத்தவும் கட்டுப்படுத்தவும் தமிழ் ஆயுதக் குழுக்களை பாவித்ததேயல்லாமல், இலங்கையில் பிரிவினையை ஆதரிக்கவில்லை.

தாம் தொடர்ந்தும் இலங்கையில் தனித் தமிழ் நாட்டுக்கான போராட்டத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்பதை இந்தியா, அதற்கு அடுத்த ஆண்டில் வெளிப்படையாகவும் மிகத் தெளிவாகவும் கூறியது. அப்போதைய இந்திய வெளிவிவகாரச் செயலாளர் எஸ்.கே. சிங், இதை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.

1988ஆம் ஆண்டு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டுக்காக சென்றிருந்த எஸ்.கே.சிங், அங்கு ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதைத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் மற்றொரு தமிழ் ஈழத்தைக் காண விரும்பாததால், தமது அரசாங்கம் இலங்கையில் தனித் தமிழ்நாடு உருவாவதை ஏற்றுக்கொள்வதில்லை என அவர் கூறினார். புலிகளும் இந்தியாவைப் பகைத்துக் கொண்டிருந்த நிலையில், இந்தியாவுக்கு மிக எளிதில் இந்த முடிவை அறிவிக்க முடியுமாக இருந்தது.

இப்போது இந்தியா, அந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்துகிறதா என்ற கேள்வி எழுகிறது. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பை வலியுறுத்தவில்லை என இந்தியா அறிவித்தமை அதையே சுட்டிக்காட்டுகிறது. 2017ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ்.ஜெய்ஷங்கர், அம்மாதம் 20ஆம் திகதி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதே, இக்கருத்தைத் தெரிவித்திருந்தார். 'இன்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருந்தது.

இந்தியாவின் அதிகாரப் படிநிலைகளின் பிரகாரம், வெளியுறவுச் செயலாளரே வெளிநாட்டுக் கொள்கைக்குப் பொறுப்பான மிகவும் உயர்ந்த அதிகாரியாவார். அவர் ஒரு விடயத்தைப் பற்றி கொள்கை ரீதியான கருத்தொன்றை வெளியிடுவதாக இருந்தால், அதுவே இந்திய அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும்.

உண்மையிலேயே ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட மூன்று தரப்பினராகிய இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் தமிழ் ஆயுதக் குழுக்களும் ஒப்பந்தத்தில் அவரவருக்குரிய கடமைகளை நிறைவேற்றவில்லை.

இந்தியா, தமிழ் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையத் தவறிவிட்டது. தமிழ் ஆயுதக் குழுக்களில் புலிகளும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. இலங்கை அரசாங்கம், சட்டத்திலுள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கவில்லை. எனவே, எவரும் எவரையும் எந்த விடயம் தொடர்பிலும் தார்மீக ரீதியில் வற்புறுத்த முடியாத நிலைமை பிற்காலத்தில் உருவாகியது.

இலங்கையின் தலையெழுத்தை மாற்றிய போதிலும் உலக வல்லரசுகளிடையே பனிப்போர் மறைந்துள்ள நிலையில், இலங்கை – இந்திய ஒப்பந்தம் இப்போது ஏறத்தாழ செல்லுபடியற்றதாகியுள்ளது.

- எம்.எஸ்.எம்.ஐயூப் -
சிரேஷ்ட ஊடகர்

## இன்றைய நாளில்...

1818 – பிரெஞ்சு இயற்பியலாளர் பிரெனெல் புகழ்பெற்ற "ஒளியின் விளிம்பு விளைவு பற்றிய தனது குறிப்புகளை" வெளியிட்டார்.
1848 – இலங்கையில் பிரித்தானியக் குடியேற்றத்துக்கெதிராக மாத்தளையில் இடம்பெற்ற கிளர்ச்சியை அடக்க கிளர்ச்சியாளர்களுடன் இராணுவத்தினர் சண்டையில் ஈடுபட்டனர்.
1900 – இத்தாலியில், முதலாம் உம்பெர்த்தோ மன்னர் கொலைசெய்யப்பட்டார்.
1921 – ஹிட்லர் செருமன் தேசிய சோஷலிச தொழிலாளர் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1957 – பன்னாட்டு அணுசக்தி முகமையகம் அமைக்கப்படட்து.
1958 – ஐக்கிய அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
1981 – இலண்டன் புனித பவுல் பேராலயத்தில் நடைபெற்ற வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா திருமணத்தை உலகத் தொலைக்காட்சிகளில் 700 மில்லியன் பேர் பார்வையிட்டனர்.
1987 – இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை அரசத் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்தனாவுக்கும் இடையில் கொழும்பில் கையெழுத்திடப்பட்டது. இந்நிகழ்வில் இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின்போது ராஜீவ் காந்தி இலங்கை இராணுவத்தினன் ஒருவனால் துப்பாக்கியால் தலையில் குத்தப்பட்டு காயம் அடைந்தார்.
1999 – இலங்கையின் வழக்கறிஞரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீலன் திருச்செல்வம் தற்கொலைக் குண்டுவெடிப்பில் படுகொலைசெய்யப்பட்டார்.
2005 – ஏரிஸ் குறுங்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
2015 – மைக்ரோசாப்ட் நிறுவனம் விண்டோஸ் 10 இயக்குதளத்தை வெளியிட்டது.

## நக்கல் நமசிவாயம்



# மாற்றம் வேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களின் பிரதான கோரிக்கை

## அதனை ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி தெரிவிப்பு





அமைப்பை மாற்ற வேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களின் கோரிக்கையாக இருந்தது. அதனை நாமும் ஏற்றுக்கொள்கிறோம் - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (27) பிற்பகல் புறக்கோட்டையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க மற்றும் கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷமல் செனரத் ஆகியோர் கட்சித் தலைமையகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை வரவேற்றனர்.

நாட்டின் சட்டத்திற்கமைவாக அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் அனுமதியுள்ளது என்றும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அதே உரிமை உண்டு என்றும் பல்வேறு திறமைகளைக்கொண்ட இளைஞர்களும் அதில் பங்கேற்றிருந்ததை தாம் கண்டதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார் .

நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்த வேளையில் தான் ஜனாதிபதியாக பதவியேற்றதாக தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார சவாலை முறியடித்து நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு பல நடவடிக்கைகளை தற்போது எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# சோஷலிச சமத்துவக் கட்சியின் தலைவர் விஜே டயஸ் 80ஆவது வயதில் காலமானார்



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் (ICFI) இலங்கைப் பகுதியான சோஷலிச சமத்துவக் கட்சியின் தலைவரும் மூத்த ட்ரொட்ஸ்கிசவாதியுமான தோழர் விஜே டயஸ் காலமானார்.

அவரின் மறைவை மிகுந்த வருத்தத்துடன் அறிவிப்பதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. அவர் அனைத்துலகக் குழுவின் தலைவர்களில் ஒருவராகவும், உலக சோஷலிச வலைத் தளத்தின் சர்வதேச ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். அவருக்கு பாரிய மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் (27) உயிரிழந்துள்ளார். ஓகஸ்ட் 27 அவர் தனது 81ஆவது பிறந்தநாளை கொண்டாடவிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் விஜேயின் மரணம், குறிப்பாக சோஷலிச சமத்துவக் கட்சிக்கும், ஒட்டுமொத்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவிற்கும், இலங்கை, தெற்காசியா மற்றும் சர்வதேச அளவில் உள்ள தொழிலாள வர்க்கத்திற்கும் பெரும் இழப்பாகும். அவர் இலங்கையிலும் உலகெங்கிலுமுள்ள தொழிலாள வர்க்கத்தின் நலன்களை அடைப்படையாகக்கொண்ட சர்வதேச சோஷலிசத்தின் ட்ரொட்ஸ்கிச கொள்கைகளுக்காக அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஒரு சளைக்காத போராளியாக இருந்தார்.

தோழர் விஜே, சோஷலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் (பு.க.க.) ஸ்தாபக உறுப்பினராக இருந்தார். 1964இல் லங்கா சமசமாஜ கட்சி, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ அரசாங்கத்திற்குள் நுழைந்துகொண்ட போது, ட்ரொட்ஸ்கிசத்திற்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்காக 1968 இல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

அப்போது லங்கா சமசமாஜக் கட்சியின் இளம் உறுப்பினராக இருந்த தோழர் விஜே, காட்டிக்கொடுப்பை எதிர்த்த இளைஞர் குழுவில் ஒரு முன்னணி நபராக இருந்தார். மேலும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வழிகாட்டுதலின்கீழ், தேவையான அரசியல் படிப்பினைகளைப் பெற்று, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் உறுதியான அரசியல் அடித்தளங்களை அமைத்தார்.

1987 டிசம்பரில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபக பொதுச் செயலாளர் கீர்த்தி பாலசூரியவின் துயரமான, அகால மரணத்திற்குப் பின்னர், தோழர் விஜே அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து அவர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் சோஷலிச சமத்துவக் கட்சியினதும் பொதுச் செயலாளராக இருந்துவந்தார். கடந்த மே மாதம் சோஷலிச சமத்துவக் கட்சியின் சமீபத்திய மாநாட்டில் அவர் கட்சியின் தலைவராக அமர்த்தப்பட்டார்.

தோழர் விஜே டயஸ், அரசியல் ஸ்தாபனத்தின் அனைத்துக் கட்சிகள், அதன் போலி - இடது அடிவருடிகள் மற்றும் தொழிற்சங்க ஏஜென்சிகளில் இருந்து, தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்காக போராடுவதில் கட்சிக்கு தலைமை தாங்கினார். அவரது வயது மற்றும் பலவீனமான உடல்நிலை ஒருபுறம் இருக்க, ராஜபக்ஷ மற்றும் விக்கிரமசிங்க அரசாங்கங்களுக்கும் அவற்றின் சிக்கன மற்றும் அடக்குமுறை திட்ட நிரலுக்கும் எதிரான தற்போதைய வெகுஜன எழுச்சிக்கு மத்தியில், தொழிலாள வர்க்கம் மற்றும் கிராமப்புற உழைப்பாளர்களுக்கு ஒரு புரட்சிகர சோஷலிச பாதையை வகுப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

முதலாளித்துவத்தின் உலகளாவிய நெருக்கடியின் கூர்மையான வெளிப்பாடான இலங்கையில் நிலவும் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடியின் மத்தியில், அவரது இழப்பு குறிப்பாக உணரப்படுகிறது. எவ்வாறாயினும், மனிதகுலத்திற்கான சோஷலிச எதிர்காலத்திற்காக அவர் முன்னெடுத்த வாழ்நாள் போராட்டத்தை இடைவிடாது முன்னெடுக்கின்ற, சோஷலிச சமத்துவக் கட்சி மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் பணியில் அவரது சக்திவாய்ந்த அரசியல் மரபு வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

மறைந்த தோழர் விஜே டயஸின் பூதவுடல் பொரளை கனத்த வீதியிலுள்ள “ஜயரட்ன ரெஸ்பெக்ட் ஹோம்” மலர்சாலையில் நாளை 30 சனிக்கிழமை வரை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து இறுதி ஊர்வலம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொரளை மயானத்திற்கு புறப்படும். பிற்பகல் 3 மணிக்கு அஞ்சலி கூட்டம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு தகனம் செய்யப்படும்.

# உப தபால் அலுவலகங்களை வாரத்தில் ஒரு நாள் மூட தீர்மானம்

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து உப தபால் அலுவலகங்களும் நேற்று (28) மூடப்பட்டன. தற்போது நாட்டில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மறு அறிவித்தல்வரை அனைத்து உப தபால் அலுவலகங்களும் திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் காலை 09 மணிமுதல் மாலை 03 மணிவரை திறக்கப்படுமென தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் நிலையங்கள் திங்கட்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும் என்பதுடன், செவ்வாய்க்கிழமைமுதல் சனிக்கிழமைவரை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை திறக்கப்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் தினேஷ் – அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல்




நாட்டில் தற்போதுள்ள நிலைமையை சீராக்குவது குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமெரிக்கத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (28) கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. இந்த சவாலான காலகட்டத்தில் இலங்கை மக்களுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என அமெரிக்கத் தூதுவர் பிரதமரிடம் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் உட்பட பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் மீண்டும் கட்டியெழுப்பவும் தலைவர்கள் பணியாற்றும்போது, உரிய செயல்முறை, நீதிக்கான அணுகல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை நிலைநிறுத்துவது அவசியம் என்றும் தூதுவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

# அந்தோனி வெரங்க புஷ்பிகா டி சில்வா கைது!



அண்மையில் பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியம் மற்றும் ‘கோட்டா கோ கம’வின் செயற்பாட்டாளரான அந்தோனி வெரங்க புஷ்பிகா டி சில்வா கொழும்பு தெற்கு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் (27) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்த செயற்பாட்டாளர், கோட்டையில் நீல நிற ஜீப்பில் இனந்தெரியாத குழுவினரால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

எவ்வாறாயினும், அவர் கடத்தப்படவில்லை, தம்மால் கைதுசெய்யப்பட்டார் என கொழும்பு தெற்கு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அவரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும், கோட்டை பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிவாயுவுக்காக 10 இலட்சம் பேர் காத்திருப்பு

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களை புதிதாக கொள்வனவுசெய்ய காத்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 10 இலட்சம் என்று அந்நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாக தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த புதிய வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக இந்த ஆண்டில் (2022) ஆரம்பத்தில் 12.5 கிலோ கிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் எடையுள்ள ஏழு இலட்சத்து முப்பத்தையாயிரம் வெற்று எரிவாயு சிலிண்டர்களை இறக்குமதிசெய்ய பெறுகை பத்திரங்கள் கோரப்பட்ட போதிலும், கொள்வனவு செய்யப்படாததால் அதனை இரத்துசெய்ய தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு புதிதாக அந்நியச் செலாவணியை செலவிடும் எந்தவொரு திட்டமும் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# அவிசாவளை முத்துமாரியம்மன் ஆலய அலங்கார உற்சவ கொடியேற்றம் இன்று

அவிசாவளை நகர், குடகம வீதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் துவஜாரோஹணம் எனப்படும் கொடியேற்ற நிகழ்வுடன் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 08 மணிக்கு விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், அனுக்ஞை, வாஸ்து சாந்தி, கணபதி ஹோமத்துடன் கிரியைகள் ஆரம்பமாவதுடன், முற்பகல் 11 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு 108 சங்காபிஷேக விசேட பூஜையுடன் கொடியேற்றம் நடைபெறும். மேலும், இரவு 07 மணிக்கு தீச்சட்டியுடன் விநாயகப் பெருமானும் முத்துமாரியம்மனும் வெளிவீதி உலா வருவதுடன் விசேட பூஜைகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாளான சனிக்கிழமை காலை புவக்பிட்டிய அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து பால்குட பவனி ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெறும். அன்றைய தினம் மாலை 06 மணிக்கு மூலமூர்த்தி, வசந்த மண்டபப் பூஜைகள் இடம்பெற்று 07.30 மணிக்கு வேட்டைத் திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 1008 சங்காபிஷேக பூஜை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 06 மணிக்கு மூலமூர்த்தி, வசந்த மண்டபப் பூஜைகள் இடம்பெற்று 07.30 மணியளவில் சோடச அலங்கார நாயகியாக ஸ்ரீ முத்துமாரி அம்பிகை தேரில் ஆரோகணித்து நகர்வலம் வரும் தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை தேர் ஆலயத்தை வந்தடைந்ததும் பிராயச்சித்த பூஜை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு தீமிதிப்பு விழா இடம்பெறவுள்ளது.

அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03 மணிக்கு பொங்கல் பூஜை மற்றும் மாலை 06 மணிக்கு வைரவர் பூஜை ஆகியன இடம்பெறவுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என ஆலய அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 28.07.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 137 0146 | 148 3500 |
| கனேடியன் டொலர் | 166 0653 | 178 2584 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0001 | 44 0652 |
| யூரோ | 252 0320 | 266 4518 |
| ஜப்பான் யென் | 1 5145 | 1 6236 |
| சிங்கப்பூர் டொலர் | 146 0577 | 156 7010 |
| ஸ்ரேலிங் பவுன் | 321 6606 | 338 78 1 |
| சுவிஸ் பிராங்க் | 260 5 2 | 276 2700 |
| ஐ.அ.டொலர் | 246 33 5 | 257 3811 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 4105 |
| குவைட் | குவைட் தினார் | 0,063 2545 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 5 04 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1630 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0018 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1710 |






வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவத்தின் தீர்த்தோற்சவம் ஆடி அமாவாசை தினமான நேற்றுக் காலை நடைபெற்றபோது மாவை கந்தன், வள்ளி தெய்வானை சமேதராய் யாழ். கீரிமலை புனித கண்டகி தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி அடியார்களை பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும் வகையில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடினார். (யாழ். நிருபர்)

# உளவியல் டிப்ளோமாவை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்ததாக சாந்திகம் நிறுவனம் ஏற்பாடு செய்த ஒரு வருட உளவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சாந்திகம் உள்ளக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஒரு வருட உளவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின்போது, பிரதம அதிதியாக சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தவிசாளர் செயினுலாப்தீன் நஜ்முத்தீன் மற்றும் ஏனைய அதிதிகளாக சாந்திகம் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சி.ஜீவசுதன், அதன் வரவிருக்கும் தலைவர் கலாநிதி கே.கஜவிந்தன், பணிப்பாளர் சி.திலீபன், சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் கல்விக்கான பணிப்பாளர் கலாநிதி சிஹ்னாஸ் துரே மற்றும் சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் கல்விக்கான இணைப்பாளரும் பிரதிப் பதிவாளரும் ஆசிரியருமான மௌலவி அல்-ஹாஜ் ஐ.எல். அப்துல் முனாப், அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஸாப் மற்றும் பல கல்விமான்கள், புத்திஜீவிகள், சான்றிதழ் பெறும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துசிறப்பித்தனர்.

இதன்போது சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் உரையாற்றுகையில், "கல்விதான் இந்த வாழ்க்கையினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகின்றது. எங்களுடைய எதிர்காலம் சிறக்க வேண்டுமாக இருந்தால், கண்டிப்பாக எங்களுக்குக் கல்வி அவசியம். கல்விக்கு எப்போதும் வயது கிடையாது, அதற்கு எல்லை என்பதும் கிடையாது. யாவரும் கல்வியில் உச்சம் தொட வேண்டும். நாட்டினுடைய தற்போதைய நிலையினைக் கருத்திற்கொண்டு பார்க்கின்றபோது கல்வி அறிவைச் சிறப்பாகப் பெற்றவர்களால் மாத்திரம் தான் இந்த நாட்டைச் சிறப்பாக வழிநடத்த முடியும்.

அவர்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. கால சூழலுக்கு ஏற்ப எச்சந்தர்ப்பத்திலும் கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புகள் எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே, நாங்கள் எந்த வகையிலும் கல்வியைக் கற்றுக் கொள்ளலாம். எல்லோரும் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும். எல்லோரும் பல்துறை கற்க வேண்டும். கல்வியால் சிறக்க வேண்டும்" என்று கல்வியின் முக்கியத்துவம் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.

# யாழ்.போதனாவின் பணிப்பாளராக மீண்டும் மருத்துவர் சத்தியமூர்த்தி



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக, மருத்துவர் த.சத்தியமூர்த்தி நேற்று முன்தினம் மீண்டும் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஒன்றரை வருடங்கள் மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்றிருந்த சத்தியமூர்த்தி, தனது கல்வியை முடித்துக்கொண்டு மீண்டும் பணிப்பாளராக நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அவசர மருத்துவப் பொருட்கள் கையளிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான ஒரு தொகுதி அவசர மருத்துவப் பொருட்களை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) நிதி உதவியுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை (27) மாலை கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கமைவாக குறித்த மருத்துவப் பொருட்களை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜோட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்திய குழுவினரிடம் கையளித்தார்.

மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் பல்வேறு மனிதாபிமான உதவிகளையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனையால் யாழில் தொடரும் உயிரிழப்புகள்

## மேலும் ஓர் இளைஞன் மரணம்

(யாழ். நிருபர்)

ஹெரோயின் போதைப்பொருளை ஊசிமூலம் எடுத்துக்கொண்ட இளைஞனின் இருதயத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை (26) உயிரிழந்துள்ளார்.

இளைஞன் போதைப்பொருளுக்கு அடிமையாகிய நிலையில், அண்மையில் இருதயத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டு சிகிச்சையளித்து மருத்துவர்களினால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

எனினும், கடந்த திங்கட்கிழமையும் மீளவும் ஊசிமூலம் போதைப்பொருளை இளைஞன் எடுத்துக்கொண்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இளைஞனின் உயிரிழப்புக்கு போதைப்பொருளினால் இருதயத்தில் ஏற்பட்ட கிருமித்தொற்றுதான் காரணம் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையினால் இந்த மாதத்தில் இரண்டாவது உயிரிழப்பு இது என்பதுடன், அண்மைய நாட்களில் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

# வட்டவளையில் அடைமழை காரணமாக மண்சரிவு: மரம் முறிந்து விழுந்து போக்குவரத்துக்கு பாதிப்பு



(கினிகத்தேனை நிருபர்)

வட்டவளை பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் (27) பெய்த அடைமழை காரணமாக பல்வேறு இடங்களில் மண்சரிவு சம்பவங்களுடன் மரம் முறிந்தும் விழுந்து போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, வட்டவளை மீனாட்சி தோட்ட 5ஆம் இலக்க லயன் தொடர் குடியிருப்பில் மண்சரிவு ஏற்பட்டுள்ள அதேவேளை, வீட்டின் குடியிருப்பிற்குள் பாரிய கற்களும் வீழ்ந்துள்ளன.

இதனால் குடியிருப்பின் ஒரு பகுதி பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் வீட்டில் வசித்துவந்த இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் வட்டவளை வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் அழைத்துச் செல்லப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பலர் தமது அயலவர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

வட்டவளை, தியகல தோட்டத்தின் பாடசாலைக்கு செல்லும் வீதியில் கடும் மழையுடனான காற்று காரணமாக வீதிக்கு குறுக்கே மரம் வீழ்ந்துள்ளதால் குறித்த பாதையூடாக செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் அசௌகரியங்களுக்குட்பட்டனர். தற்போது குறித்த மரத்தை தோட்ட நிர்வாகத்தினூடாக அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இந்திய வள்ளலார் கருணைக் குழுவின் நிதி அனுசரணையில் ஹட்டன் அசோகாஸ் சேகரனின் ஏற்பாட்டில் கொட்டகலை வீ ஆசிரியர் ஒன்றியத்தினால் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு பத்தனை மவுண்ட்வேணன் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வீ ஆசிரியர் ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு உலருணவுப் பொருட்களை வழங்கி வைத்தனர். (பி.கேதீஷ்)



கதிர்காமம் கொடியேற்றத்தைத் தொடர்ந்து தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் ஆலய பாத யாத்திரை குழுவினர் தமது பாத யாத்திரை பயணத்தை ஆரம்பித்தனர். இந்தப் பாத யாத்திரை குழுவினர் தலவாக்கலை, லிந்துலை, நானுஓயா, நுவரெலியா, பொரகஸ், கெப்பட்டிபொல, வெளிமடை, பண்டாரவளை, எல்ல, வெல்லவாய, புத்தள வழியாக கதிர்காமத்தை சென்றடையவுள்ளனர். (தலவாக்கலை நிருபர்)

# சிலிண்டர் திருடிய நபரை மடக்கிப் பிடித்த மக்கள்

## நானுஓயாவில் சம்பவம்



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா டெஸ்போட் பகுதி வீடொன்றிலிருந்து கேஸ் சிலிண்டர் ஒன்று களவாடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. பசுமலை பகுதியில் இருந்து டெஸ்போட் பகுதிக்கு விருந்தாளியாக வருகை தந்திருந்தவர் நேற்றுமுன்தினம் (27) காலை தனி வீடு ஒன்றிலிருந்து வெற்று கேஸ் சிலிண்டர் ஒன்றினை திருடிச் சென்றுள்ளார்.

குறித்த கேஸ் சிலிண்டரை நானுஓயா கிரிமிட்டிய பிரதான நகரில் விற்பனை செய்யமுற்பட்டபோது பிரதேச மக்களாலும் இளைஞர்களாலும் குறித்த நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். திருடப்பட்ட கேஸ் சிலிண்டருடன் சந்தேகநபரையும் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கைதான சந்தேகநபர் தொடர்பில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# டேஸ்போட் பிரதேச மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் மின்கம்பம்

## மெத்தனம் காட்டும் நுவரெலியா மின்சார சபை; திருத்தியமைத்துத்தரக் கோரிக்கை



(செ.திவாகரன்)

நானுஓயா, டெஸ்போட் பிரதேசத்தில் சுமார் 20 வீடுகளை கொண்ட லயன் தொகுதியில் ஒரு மாதத்திற்கு மேலாக முறிந்த நிலையில் மின் கம்பங்கள் சேதமடைந்து காணப்படுகின்றன. இது தொடர்பாக நுவரெலியா மின்சார சபை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும் அவர்கள் அசமந்தப் போக்கை கடைபிடிப்பதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த பிரதேசத்துக்கு வருவதானால் போக்குவரத்துக்கு எரிபொருள் இல்லை. அதனால் தம்மால் எதுவும் செய்யமுடியாதெனவும் அவர்களால் தெரிவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் மின்சார சபை ஊழியர்களால் குறித்த மின்கம்பத்தினை நிமிர்த்தி ஏணி ஒன்றின் மூலம் கட்டி தாக்குபிடிக்குமளவுக்கு தற்காலிகமாக கட்டி வைத்துள்ளனர். இவ்வாறான நிலையில் எப்போது வேண்டுமானாலும் இதனால் குறித்த லயன்தொகுதிக்கு பாதிப்பு ஏற்படலாம். இதனால் மின்கம்பத்துக்கருகிலுள்ள வீட்டில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் பெரும் அபாயத்துக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த லயன் பகுதி கிராம மக்களின் நடைபாதையாகவும் இருக்கின்றது. மற்றும் போக்குவரத்துக்காக வாகனங்கள் இவ்வழியாக அதிகளவில் செல்கின்றன. அதிக மழை, காற்று வீசும் நேரத்தில் குறித்த மின்கம்பம் உடைந்து விழும் நிலையில் உள்ளதால், மின்சார சபை அதிகாரிகள் மின்கம்பத்தை மாற்றாமல் மெத்தனப்போக்கை காட்டி வருகின்றனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்ட குறித்த மின் கம்பங்கள், தற்போது முற்றிலுமாக பழுதடைந்து கீழே விழும் அபாய நிலையில் இருக்கின்றன. சேதமடைந்துள்ள அந்த மின்கம்பங்கள் தற்போது வரை சீரமைக்கப்படாமல் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் விழிப்புணர்வு குழுவை வலுவடையச் செய்யும் செயற்பாடு



(கண்டி நிருபர்)

கொவிட் தொற்று காரணமாக ஏற்கனவே நாம் பல பாடங்களைக் கற்றுக் கொண்டோம். ஆனால், தற்போது அதனை விடவும் பாரதூரமான ஒரு சூழ்நிலையில் மீண்டும் ஒரு பெருந்தொற்றை எம்மால் எதிர்கொள்வது இலகுவான காரியமல்ல. அன்று நாடு சுமுகமான நிலையில் இருந்தது. இன்று குரங்கு அம்மை, டெங்கு போன்றவற்றுடன் கொவிட் தொற்றும் பரவ ஆரம்பித்தால் அதனை எதிர்கொள்ளவது சிரமமாகும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

மத்திய மாகாண தொற்று நோய் விழிப்புணர்வு குழுவை மேலும் வலுவடையச் செய்யும் செயற்பாடு கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம்(27) நடைபெற்றது. இதன்போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் பல சிக்கல்கள் உள்ளன. பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற துறைகளில் குழப்ப நிலை காணப்படுகிறது. இவை மேலும் சவாலாக உள்ள நிலையில் ஆபத்தை எதிர்கொள்வதற்கு முன் விழிப்புணர்வு தேவை என்றார். மத்திய மாகாண திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# ஆளுங்கட்சியின் பிரதி – உதவி முதற்கோலாசான்கள் நியமனம்







நாடாளுமன்ற ஆளுங்கட்சியின் பிரதி முதற்கோலாசான்கள் மற்றும் உதவி முதற்கோலாசான்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் நாடாளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் (27) வழங்கப்பட்டன.

அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி சாகர காரியவசம் மற்றும் ஜயந்த கெட்டகொட ஆகியோர் பிரதி முதற்கோலாசான்களாகவும், கோகிலா குணவர்தன, மதுர விதானகே மற்றும் திஸ்ஸ குட்டிஆரச்சிஆகியோர் உதவி முதற்கோலாசான்களாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து உரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது, நாடாளுமன்ற சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆளுங்கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஆளுங்கட்சி முதற்கோலாசானின் செயலாளரும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளருமான சட்டத்தரணி சமிந்த குலரத்ன மற்றும் சபை முதல்வரின் செயலாளரும் பிரதமரின் மேலதிக செயலாளருமான ஹர்ஷ விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களாக இருவர் நியமனம்

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பதவிக்கு பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார மற்றும் திருமதி ஷெனுகா செனவிரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகவும் (ஊடகம்) மற்றும் பேராசிரியர் ஷெனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகவும் (சர்வதேச ஊடகம்) அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார, அந்த பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவராகவும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சின் செயலாளராக பணியாற்றியுள்ள அவர், அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகமாகவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகமாகவும் பதவி வகித்துள்ளார். ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் (சர்வதேச ஊடகம்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஷெனுகா செனவிரத்ன, இந்த நாட்டின் இராஜதந்திர விவகாரங்களில் அதிக அனுபவமுள்ள சிரேஷ்ட அதிகாரியான அவர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியையும் வகித்துள்ளார்.

திருமதி ஷெனுகா செனவிரத்ன, ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை உயர்ஸ்தானிகராகவும், தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியாக ஜெனீவா மற்றும் நியூயோர்க்கில் பணியாற்றியுள்ளார்.

# இரண்டு துப்பாக்கிகளுடன் சந்தேகநபரொருவர் கைது

*(அநுராதபுரம் செய்தியாளர்)*

உள்நாட்டில் தயாரித்த இரண்டு துப்பாக்கிகளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கெகிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக் கமைய, கெகிராவ பொலிஸ் பிரிவின் மிரிஸ்வத்த பகுதி வீடொன்றில் நேற்று முன்தினம் (27) நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு உள்நாட்டு துப்பாக்கிகளையும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர், கெகிராவ மிரிஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்ற பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டிருந்தவர் என்பது மேலதிக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெகிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# அதிக விலைக்கு விற்பனை செய்ய களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் பொலிஸாரால் மீட்பு

வெயாங்கொட, வடத்தர பிரதேசத்தில் செல்வந்த வியாபாரியொருவரின் வீடொன்றை பரிசோதனை செய்தபோது 55லீற்றர் டீசல், 05லீற்றர் பெற்றோல் மற்றும் ஒரு பீப்பாய் கோடா அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் குறித்த வியாபாரி கைதுசெய்யப்பட்டுள்ளதாக வெயாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகவிலையில் விற்பதற்காக எரிபொருள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய, வடத்தர பிரதேசத்திலுள்ள தனவந்த வியாபாரியொருவரின் வீடு சுற்றிவளைக்கப்பட்டபோது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த எரிபொருள் தொகை மற்றும் கோடா என்பன கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் காணி உரிமையாளர் என்பதுடன் தனவந்த வர்த்தகர் என்றும் அதிகவிலையில் விற்பனை செய்வதற்காக எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும், மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் தனது நண்பர்களுக்கு விற்பனை செய்வதற்காக கள்ளச்சாராயம் காய்ச்சி வந்துள்ளமையும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விசாரணைகளை தொடர்ந்து சந்தேகநபரான




வர்த்தகர் அத்தனகல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# ராஜபக்ஷக்களை அரசியலில் இருந்து அகற்ற நினைத்தீர்கள் எனில் அது பகல் கனவு

## இந்திக்க அனுருத்த எம்.பி.சூளுரை



ராஜபக்ஷவை அரசியலில் இருந்து அகற்றுவதற்கு எவரேனும் தயாராக இருந்தால் அது வெறும் கனவு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அழிக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும், எதிர்காலத்தில் பொதுஜன பெரமுன வலுவடைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் எனவும் இந்திக அனுருத்த எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் (27) கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் முன்னாள்அமைச்சர்பெசில் ராஜபக்ஷஅதற்கான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

எதிர்வரும் தேர்தலில் தமது கட்சி பற்றிய மக்களின் அபிப்பிராயத்தை காணமுடியும் என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், தமது கட்சியை மக்கள் நிராகரித்தால் அதனை கட்சியாக ஏற்றுக்கொள்ளத் தயார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கட்சியின் தலைவராக தொடர்ந்தும் செயற்படுவார் எனவும் எதிர்வரும் தேர்தலில் அவரது தலைமையில் கட்சி போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தொற்றால் ராகம புகையிரத நிலைய போக்குவரத்து அட்டை விநியோகப்பிரிவுக்கு பூட்டு

ராகம புகையிரத நிலைய அதிகாரிகள் உள்ளிட்ட பணியாளர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமையினால் நேற்று (28) பயணிகளுக்கு புகையிரத போக்குவரத்து அட்டைகள் வெளியிடப்படவில்லை.

கட்டண அட்டை விநியோகிக்கப்படாது என அறிவித்து புகையிரத நிலைய அறிவிப்பு பலகையில் அறிவிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதன் காரணமாக, ராகம புகையிரத நிலையத்துக்கு வருகைதந்த பயணிகள், புகையிரத போக்குவரத்து அட்டையை பெற்றுக்கொள்ளாமல் இலவசமாக புகையிரதத்தில் பயணித்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

புகையிரத போக்குவரத்து அட்டை விநியோகிக்காவிட்டாலும், ராகம புகையிரத நிலையத்தினூடாக அலுவலகப் பயணிகள் உள்ளிட்ட சாதாரண போக்குவரத்து சேவைகளும் முன்னெடுக்கப்பட்டன.

புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பயண அட்டை விநியோகப் பிரிவு மூடப்பட்டுள்ளதாகவும் புகையிரத போக்குவரத்து அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாமை தொடர்பில் புகையிரத நிலைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெபினார் தொடர் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மறுசீரமைக்க தீர்மானம்

## இலங்கை முதலீட்டுச்சபை தகவல்



வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான உச்ச நிறுவனமான முதலீட்டுச் சபை, பின்னடைவுகள் இருந்தாலும் புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் இலங்கையில் சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிகழ்நிலை இணையவழிக் கருத்தரங்குகளைத் தொடங்குவதில் மகிழ்ச்சியடைகிறது.

கடினமான காலங்கள் முதலீட்டாளர்களுக்கு நாட்டில் புதுமையான முதலீடுகளில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்புகளுக்கான ஒரு காலமாக இருக்கும் என்று முதலீட்டுச் சபை கருதுகிறது. எனவே, நாட்டிற்கு புதிய முதலீடுகளைக் கொண்டுவரும் வகையில், சாதகமான திசையில் நகர்வதை உறுதிசெய்வதற்கு முதலீட்டுச் சபை எந்தக் கல்லையும் விட்டுவைக்கவில்லை.

மேலும், முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தில் 27ஆவது மாடியில் சமீபத்தில் வெளியிடப்பட்ட முதலீட்டாளர் வசதி நிலையம் பற்றிய விழிப்புணர்வை முதலீட்டாளர்களுக்கு இணையவழிக் கருத்தரங்கு தொடர் உருவாக்குகிறது.

உலகெங்கிலுமுள்ள பங்கேற்பாளர்களுடன் உற்பத்தித் துறையை உள்ளடக்கிய சூம் மூலம் தொடரின் முதல் நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது. முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம். வீரகோன் வழங்கிய விளக்கக்காட்சியுடன் 60 நிமிட வலையரங்கம் ஆரம்பமானது. அங்கு அவர் முதலீட்டு சூழல், முதலீட்டு ஊக்குவிப்பு, திறமை மற்றும் கல்வி, சந்தை அணுகல், வாழ்க்கைத் தரம் மற்றும் இருப்பிட நன்மைகள் போன்ற பகுதிகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் ஏன் இலங்கை என்ற தலைப்பில் ஒரு மேலோட்டத்தை வழங்கினார்.

உற்பத்தித் துறைக்கு முதலீட்டுச் சபை வழங்கும் சலுகைகள் மற்றும் வசதிகளைப் பற்றி எடுத்துக்காட்டிய அதேவேளையில், இலத்திரனியல் மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள், வள்ளம் கட்டுதல், இறப்பர் சார்ந்த பொருட்கள், புடவை மற்றும் ஆடைகள் உற்பத்தித் துறை, வாகனங்களின் பாகங்கள் மற்றும் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் கைத்தொழில்களில் கிடைக்கும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து திருமதி வீரகோன் விளக்கினார். அமர்வைத் தொடர்ந்து கேள்வி-பதில் அமர்வு நடைபெற்றது, இது பதிவுசெய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் தங்கள் கேள்விகளை சிரேஷ்ட முதலீட்டுச் சபை அதிகாரிகள் குழுவிடம் முன்வைக்க உதவியது.

சீனா, ஜப்பான், இந்தியா, கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேஷியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், வங்காளதேசம், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், டென்மார்க், நோர்வே, ஸ்வீடன், பின்லாந்து, துருக்கி, அமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 206 பங்கேற்பாளர்கள் பதிவு செய்ததில் இணையவழிக் கருத்தரங்கிற்கு அபரிமிதமான ஆர்வம் இருந்தது.

வலைப்பதிவுத் தொடர் குறித்து கருத்து தெரிவித்த முதலீட்டுச் சபை தலைவர் ராஜா எதிரிசூரிய, “நாட்டில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் இலங்கையில் முதலீடு செய்வதனை ஊக்குவிப்பதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் இவ்வாறான இணையவழிக் கருத்தரங்குத் தொடர் மிகவும் பொருத்தமானது” என்றார்.

“முதல் இணையவழிக் கருத்தரங்கு தொடரைப் பொறுத்தவரையில், உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களை, மிகுந்த ஆர்வத்துடனும், உத்வேகத்துடனும் இணையவழிக் கருத்தரங்குத் தொடரில் இணைந்திருப்பதைப் பார்க்கும்போது, இது மிகப்பெரிய வெற்றியாக அமைந்திருந்தது என்றும் இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இத்தருணத்தில் இதுவும் ஊக்கமளிக்கும் காரணியாகும்” என்றும் முதலீட்டுச் சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தொடரின் அடுத்த இணையவழிக் கருத்தரங்குகள் முறையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், சேவைத்துறை மற்றும் பயன்பாட்டுத் துறைகள் போன்ற துறைகளை ஆராய்வதுடன் முதலீட்டுச் சபையின் இணையதளமான www.investsrilanka.com மூலம் அறிவிக்கப்படும்.



# நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வருமானமின்றி திணறிவரும் ஏறாவூர் நகர சபை

## நகர சபைத் தலைவர் நழிம் கவலை



(மட்டக்களப்பு நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஏறாவூர் நகர சபையின் வருமானம் மற்றும் அறவீடுகள் பாதியாகக் குறைந்துள்ளதாக ஏறாவூர் நகர சபையின் தலைவர் எம்.எஸ்.நழிம் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் 52ஆவது மாதாந்த அமர்வு நகர சபை அலுவலக மண்டபத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

அங்கு மாதாந்த அமர்வை ஆரம்பித்துவைத்து மேலும் உரையாற்றிய நகர சபைத் தலைவர் நழிம்,

''தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏறாவூர் நகர சபையின் வருமானத்திலும் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் வாழ்க்கை தொழிலை இழந்து வருமானத்தை இழந்து நிம்மதியை இழந்து விரக்தியுற்ற நிலையில் உள்ளது.

அதனால் மக்களிடம் அறவீடுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் நகர சபை வருமானமின்றி சிரமத்தை எதிர்நோக்கி யுள்ளது. அனைத்துத் தொழில் துறைகளுமே கேள்விக்குறியாகியுள்ளது. அன்றாடத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, அரச உத்தியோகத்தர்களும்கூட பொருட்களின் அசுர விலையேற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருட்களின் அதிகரித்த விலையேற்றத்தினால் நகர சபையும் அதன் சேவை வழங்கல் பாவனைக்கான எரிபொருள், மின் உபகரணங்கள், காகிதாதிகள் உட்பட இன்னபிற சேவை வழங்கும் பொருட்களைக்கூட கொள்வனவு செய்ய முடியாமல் திணறி வருகின்றது" - என்றார்.

# இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பேராறு சிறுவர் பூங்கா கவனிப்பாரற்ற நிலையில்!





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பேராறு சிறுவர் பூங்கா இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது கவனிப்பாரற்ற நிலையில் இளைஞர்களினால் மது அருந்தும் இடமாக மாறியுள்ளது.

இப்பேராறு சிறுவர் பூங்கா பராமரிப்பின்றி அங்குள்ள பெறுமதியான அமரும் கதிரைகள் மற்றும் கொங்கிரீட் தூண்களும் உடைத்து எறியப்பட்டதோடு, நாட்டப்பட்ட மரங்களையும் சேதப்படுத்தியுள்ளார்கள்.

அங்குள்ள பாதுகாப்பு வேலிகளை வெட்டி எடுத்துள்ளதோடு, எல்இடி ஒன்பது மின்விளக்குகளும் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

இரண்டு கோடிகளை செலவு செய்து நிர்மாணித்த பிரதேச சபைக்கு ஒரு பாதுகாவலரை நியமிக்க முடியாதுள்ளதாகவும் உள்ளது. சீரான முறையில் பாதுகாத்து அதனை பார்வையிடுவதற்கு ரிக்கெட் விநியோக நடவடிக்கைகளை மேற்கொண்டால் சிறந்த வருமானம் கிடைக்கக்கூடியதாக இருக்குமெனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# பெரியதம்பிரான் ஆலய தீர்த்தோற்சவத்தில் நீராடச்சென்று கடலலையில் சிக்கி மாயமான மாணவன் சடலமாக மீட்பு



(பாறுக் ஷிஹான்)

கடலலையில் சிக்கி இழுத்துச்செல்லபட்டு காணாமல்போன பாடசாலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை (26) மாலை 3.30 மணியளவில் அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிலுள்ள கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன், 3 மாணவர்கள் பெரியதம்பிரான் ஆலய உற்சவ இறுதிநாளான அன்று தீர்த்த உற்சவத்தில் நீராடச்சென்றபோது கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இரு மாணவர்கள் உயிர்த்தப்பிய நிலையில் கரைசேர்ந்ததுடன், மற்றுமொரு மாணவன் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில், மாயமானார்.

இவ்வாறு காணாமல்போன பெரிய நீலாவணை-1ஐச் சேர்ந்த இராசநாயகம் சனுஜன் (16 வயது) என்ற மாணவனின் சடலம் நேற்று முன்தினம் (27) மாலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களே இவ்வனர்த்தத்தில் சிக்கிக்கொண்டதுடன், கடல் வழமைக்கு மாறாக கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில் அதனையும் பொருட்படுத்தாது கடல் நீச்சலில் ஈடுபட்டிருந்தனர்.

வழமைபோன்று குறித்த கடற்கரை பகுதிக்குச் சென்ற நிலையில் இவ்வாறு கடலில் இழுத்துச் சென்றுள்ளது. இதில் இருவர் மீட்கப்பட்டதுடன், ஏனைய மாணவரைத் தேடும் பணியில் கடற்படையினர், கடற்றொழிலாளர்கள், உறவினர்கள் ஈடுபட்டிருந்த பின்னர் நேற்று முன்தினம் (27) மாலை குறித்த கடற்பகுதிகளில் இருந்து சடலம் பொதுமக்கள் முன்னிலையில் மீட்கப்பட்டது.

மேலும் சடலம் உடல்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆலையடிவேம்பு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிலையத்தில் QR முறையிலான எரிபொருள் விநியோகம் வெற்றி






(ஆலையடிவேம்பு நிருபர்)

ஆலையடிவேம்பு பல்நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் (27) கியூஆர் பரிசோதனை மற்றும் வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையில் சுமுகமாகவும் நேர்த்தியான முறையிலும் பெற்றோல் வழங்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் உத்தியோகத்தர்களின் கியூஆர் பரிசோதனை உதவியுடன் அக்கரைப்பற்று பொலிஸாரின் ஒத்துழைப்போடு எரிபொருள் நிரப்பு நிலையத் தலைவர் மற்றும் முகாமையாளர் உள்ளிட்ட ஊழியர்களால் பெற்றோல் விநியோகம் சீராக இடம்பெற்றது.

பெற்றோல் விநியோகம் அமைதியாக ஆரம்பமான நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் கூட்டுறவுச் சங்க ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய ஜெனரேட்டர் வசதியுடன் மக்கள் நலன் கருதி பெற்றோல் வழங்க எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகம் நடவடிக்கை எடுத்தமை சிறப்பாக அமைந்தது.

எவ்வித தடைகளுமின்றி மிகவும் சீரான முறையில் 6, 7, 8, 9 இறுதி இலக்கத்தினையுடைய வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டதை காண முடிந்தது. இதேநேரம் பெண்களுக்கும், மதகுருமாருக்கும் ஒரு வரிசை என பெற்றோல் வழங்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

குறித்த எரிபொருள் நிலையத்திற்கு வழங்கி வைக்கப்பட்ட 6,600 லீற்றரில், குறித்த பெற்றோலை பிரித்து வழங்கக்கூடிய வாகனங்களுக்கு முன்கூட்டியே டோக்கன் வழங்கி, சிறந்த முன்னெடுப்பை எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகம் எடுத்திருந்தமை சிறப்பாக அமைந்தது.

இதேநேரம் கியூஆர் பெறமுடியாத பொது மக்களுக்கு அதனை பெற்றுக்கொடுக்க ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்றில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருக்கோவில் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், அவரிமிருந்து 1900 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை அக்கரைப்பற்று மேலதிக மாவட்ட/நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜீத் முன்னிலையில் நேற்று முன்தினம் (27) ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கங்குவேலி ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்



(கிண்ணியா, கந்தளாய் நிருபர்கள்)

வரலாற்றுச் சிறப்புமிக்க கங்குவேலி ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ நிகழ்வுகள் நேற்று முன்தினம் (27) கோலாகலமாக ஆரம்பமாகின.

அதனை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றதுடன், மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தார்.

இயற்கை எழில் கொஞ்சும் இவ்வாலயத்தின் ஆடி அமாவாசை நிகழ்வுகளில் கலந்துகொள்ள கிடைத்தமை தமக்கு கிடைக்கப்பெற்ற பாக்கியமாகும் என்றும் காடு சார்ந்த பகுதியில் அமையப்பெற்ற இவ்வாலயத்தை நோக்கி பக்தர்கள் அதிகமானோர் கலந்துகொண்டனர். அவரவர் நேர்த்திகள், எண்ணங்கள் யாவும் சிறப்பாக அமைய பிரார்த்திப்பதாக இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தை இம்முறை நடத்துவதில் எரிபொருள் இன்மை காரணமாக சிரமங்களை எதிர்நோக்கினோம். இருப்பினும் குறித்த விடயத்தை அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். அவர் இந்நிகழ்வை சிறப்பாக மேற்கொள்ள தேவையான ஒத்துழைப்பை வழங்கினார். இல்லையெனில், இந்நிகழ்வை நடத்தியிருக்க முடியாது. அதனடிப்படையில் மாற்று மதத்தைச் சேர்ந்தவராக அரசாங்க அதிபர் இருந்தபோதும் இதனை நடத்த ஒத்துழைப்பை வழங்கியதுடன், இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தமையை பெரிதும் நன்றிகூர்வதாக இதன்போது ஆலய பரிபாலனசபைத் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் இந்நிகழ்வை சிறப்பாக மேற்கொள்ள வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அவரது சேவை மனப்பாங்கை பாராட்டி ஆலய பரிபாலன சபை நிர்வாகத்தினர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். மேலும் இந்நிகழ்வை சிறப்பாக நடத்த ஒருங்கிணைப்பை வழங்கிய மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்கிற்கும் இதன்போது பொன்னாடை அணிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமுத்திர சுற்றாடல் அதிகாரசபையின் வடக்கு, கிழக்கு மாகாண உதவி முகாமையாளர் டி.சிறீபதி உள்ளிட்ட பக்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருது - கல்முனை பகுதிகளில் சைக்கிள், பெற்றோல் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேசங்களில் சைக்கிள், பெற்றோல் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக சைக்கிள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், இப்பகுதிகளில் கடந்த சில வாரங்களாக சந்தைகள், வங்கிகள், பள்ளிவாசல்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் நிறுத்திவைக்கப்படுகின்ற சைக்கிள்கள் காணாமல்போவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் சாய்ந்தமருது பெரியபள்ளிவாசல் உட்பட இரண்டு பள்ளிவாசல்களில் 04 சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. பள்ளி வளாகத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களின் சைக்கிள்களே இவ்வாறு திருடிச் செல்லப்பட்டிருக்கின்றன.

இரவுநேரங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கின்ற வேளைகளில் வீட்டு முற்றங்களில் நிறுத்திவைக்கப்பட்டிக்கின்ற சைக்கிள்களும் களவாடப்பட்டு வருகின்றன. தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்கின்ற மாணவர்களின் சைக்கிளைகளும் திருடிச் செல்லப்படுகின்றன.

இவ்வாறு திருடப்பட்ட சில சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதுடன் இச்சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனவும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, பின்னிரவு நேரங்களில் வீட்டு முற்றங்களில் நிறுத்திவைக்கப்படுகின்ற மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளில் இருந்து பெற்றோல் திருடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு பெற்றோல் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவர் பொதுமக்களினால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் நிறுத்திவைக்கப்படுகின்ற மோட்டார்சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களில் இருந்தும் இரவுவேளைகளில் எரிபொருள் திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்ற அநேகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் இவ்விடயங்களில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கந்தளாயில் ஹெரொயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆறு கிராம் ஹெரொயின் போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரை அடுத்த மாதம் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் (27) உத்தரவிட்டார்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனைசெய்து வருவதாக கந்தளாய் போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் 06 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வீட்டில் வைத்திருந்த நிலையில், கைதுசெய்து சந்தேகநபரை பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# வெலிக்கடை படுகொலையின் 39ஆம் ஆண்டு நினைவுதினம் திருமலையில் அனுஷ்டிப்பு



(கிண்ணியா நிருபர்)

கறுப்பு ஜூலை 39ஆம் ஆண்டு வெலிக்கடை இனப்படுகொலையின் நினைவஞ்சலி நிகழ்வு திருகோணமலையிலுள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவு அரங்கில் நேற்று முன்தினம் (27) மாலை 5.40 மணிக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் நிர்வாகச் செயலாளர் நித்தி மாஸ்டர் தலைமையில் இடம்பெற்றது.

1983ஆம் ஆண்டு ஜூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உட்பட 53 வீரமறவர்களுக்கு இதன்போது நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு, நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் மூத்த உறுப்பினர் க.சிங்கம் உட்பட பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே திண்மக்கழிவகற்றல் சேவை பாதிக்கப்பட்டது

**சிலர் பேஸ்புக்கில் திட்டமிட்டு சேறு பூசுவதாக கல்முனை மேயர் றகீப் கவலை**

(சாய்ந்தமருது நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவை கடந்த சில தினங்களாக பாதிக்கப் பட்டிருந்தது. தற்போது டீசல் கிடைக்கப் பெற்றுள்ளமையால் இச்சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது. எனினும், சிலர் இதனைவைத்து எமது மாநகர சபை நிர்வாகத்தின் மீது முகநூல் வாயிலாக திட்டமிட்டு சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டிருகின்றனர் - என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் 52ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் (27) பிற்பகல் இடம்பெற்றது. இதன்போது திண்மக்கழிவகற்றல் சேவையில் ஏற்பட்ட தடங்கல் குறித்து விபரிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொருளாதார நெருக்கடி காரணமாக உருவாகியுள்ள எரிபொருள் தட்டுப்பாடு என்பது முழு நாட்டினதும் இயல்புநிலையை வெகுவாக பாதிப்படையச் செய்திருக்கிறது. தமது திண்மக்கழிவகற்றல் வாகனங்களுக்கு எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் நாட்டிலுள்ள பல உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவகற்றல் சேவையை நீண்ட நாட்களாக இடைநிறுத்தி வைத்திருக்கின்றன. இன்னும் சில உள்ளூராட்சி மன்றங்கள் மட்டுப்படுத்தப்பட்டளவில் இச்சேவையை முன்னெடுத்துள்ளன.

ஆனால், எமது கல்முனை மாநகர சபையினால் சில நாட்கள் மாத்திரமே இச்சேவையை முன்னெடுக்க முடியாமல் போயிருந்தது. முழு நாட்டிலும் டீசல் இல்லாவிட்டாலும் தனது கையிருப்பில் உள்ளதைக்கொண்டு கல்முனை மாநகர சபைக்கு டீசல் விநியோகிக்கப்படும் என்ற உடன்பாட்டின் பிரகாரம் எமக்கு எரிபொருள் வழங்குகின்ற நிலையத்திலிருந்து முடியுமானளவு டீசல் தரப்பட்டது. அதனால் டீசல் இறக்குமதி தடைப்பட்டிருந்த காலப்பகுதியில் கூட மாநகர சபைக்கென பிரத்தியேகமாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த டீசல் கிடைத்தது. அதன் பயனாக ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் திண்மக்கழிவகற்றல் சேவை தடைப்பட்டிருந்தபோதிலும் எமது மாநகர சபையினால் எவ்வித தடங்கலுமின்றி இச்சேவை முன்னெடுக்கப்பட்டு வந்தது. அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் முற்றாக தீர்ந்த பின்னரே எமக்கும் எரிபொருள் தடைப்பட்டது.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவினால் இறுதியாக வெளியிடப் பட்ட அத்தியாவசிய சேவைகள் சம்மந்த



மான வர்த்தமானியில் உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக்கழிவகற்றல் சேவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவரது பிழையான அறிவிப்பினால் உள்ளூராட்சி மன்றங்களின் வாகனங்களுக்கு எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் டீசல் பெறமுடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டது. இதனால் எமது மாநகர சபையின் கடந்த மாத அமர்வில் உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக்கழிவகற்றல் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துமாறு கோரி பிரேரணையொன்றை நிறைவேற்றி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பியிருந்தோம். எனினும், அரசியல் குழப்பநிலை காரணமாக எதுவும் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

எவ்வாறாயினும் இப்போது எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டு, விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், கல்முனை மாநகர சபை வாகனங்களுக்கும் டீசல் கிடைக்கப்பெறுகின்றன. இதையடுத்து குப்பை அள்ளும் செயற்பாடுகளை வழமைபோல் கிரமமாக முன்னெடுக்க ஆரம்பித்துள்ளோம். பிரதான வீதிகள், முக்கிய தெருக்கள் மற்றும் பொது இடங்களில் குவிந்து கிடக்கின்ற திண்மக்கழிவுகள் துரிதமாக அகற்றப்பட்டு வருகின்றன. வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள் யாவும் அடுத்த ஒருசில தினங்களில் முற்றாக அகற்றப்பட்டுவிடும்.

இடைப்பட்ட சிறிதுகாலத்தில் இலங்கை போக்குவரத்து பஸ் சாலையில் டீசலை பெற்றுக் கொள்ள முயற்சித்தோம். ஆனால், ஓரிரு வாகனங்களுக்கு மாத்திரமே தர முடியுமென கூறப்பட்டது. கல்முனை மாநகர சபையை பொறுத்தளவில் முப்பதுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு டீசல் தேவையாக உள்ள நிலையில், ஓரிரு வாகனங்களைக்கொண்டு, ஓரளவே சேவையை முன்னெடுக்க முடிந்தது.

டீசல் இல்லாத காரணத்தினாலேயே திண்மக்கழிவகற்றல் சேவை பாதிக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், ஒருசிலர் முகநூல்களில் வேண்டுமென்றே மாநகர சபையை மூர்க்கத்தனமாக விமர்சித்துள்ளனர். எம்மீது கொண்ட தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மக்கள் மத்தியில் பிழையான அபிப்பிராயங்களை தோற்றுவித்து, அரசியல் குளிர்காய முயற்சிக்கின்றனர். உண்மை என்னவென்று தெரிந்திருந்தும் இவர்கள் முகநூல்களில் வசை பாடுகின்றனர் என்றால், அவர்கள் மனநோயாளிகளாகவே இருக்க வேண்டும். ஆக, இன்று முகநூல் என்பது இல்லாதிருந்தால், அவர்கள் அங்கொடையில்தான் இருந்திருப்பார்கள்.

சமகாலத்தில் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை தீர்த்துவைக்கின்ற விடயத்தில் நாங்கள் அர்ப்பணிப்புடன் முன்நிற்கிறோம். எரிவாயு விடயத்தில் பிரதேச செயலாளர்களையும் எரிவாயு நிறுவனங்களின் அதிகாரிகளையும் ஒன்றிணைத்து, நான் தொடர்ச்சியாக மேற்கொண்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கை காரணமாக மாநகர சபைக்குட்பட்ட அனைத்து குடும்பங்களும் எரிவாயுவை பெற்றுக்கொள்ளும் வகையில் எம்மால் குடும்ப அட்டை வழங்கப்பட்டு, எரிவாயு விநியோகம் சீராக முன்னெடுக்கப்பட்டு வருவதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வாழைச்சேனை மீன்பிடி துறைமுக வாகனங்களில் 1500 லீற்றர் டீசலை கடத்திச்சென்ற 7 பேர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை மீன்பிடி துறைமுக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நள்ளிரவில் கலன்களில் சட்டவிரோதமாக எரிபொருளான டீசலை நிரப்பி அதனை வாகனங்களில் எடுத்து கடத்திச்செல்ல முற்பட்ட 7 பேரை கைதுசெய்ததுடன், 1500 லீற்றர் டீசலுடன் இரு வாகனங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் நேற்று (28) அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று அதிகாலை குறித்த துறைமுகத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தை பொலிஸார் முற்றுகையிட்டபோது, வேன் மற்றும் கூலர் வாகனம் ஆகிய இரு வாகனங்களில் கலன்களில் சட்டவிரோதமாக டீசலை நிரப்பிக் கொண்டிருந்த 7 பேரை கைதுசெய்ததுடன், 1500 லீற்றர் டீசல் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய இரு வாகனங்களையும் கைப்பற்றினர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் ஒலுவில் துறைமுகத்திற்கு டீசலை எடுத்துச் செல்லும் போர்வையில் இந்த கடத்தல் இடம்பெற்றுள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## ஆலையடிவேம்பில் சுமுகமான முறையில் விநியோகிக்கப்பட்ட லிட்ரோ எரிவாயு



(ஆலையடிவேம்பு நிருபர்)

இரு வாரங்களுக்குப் பின்னர் ஆலையடிவேம்பு தர்மசங்கரி மைதானத்தில் நேற்று (28) 700 லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் சுமுகமான முறையில் வழங்கப்பட்டன.

நேற்று கிடைத்த தகவலை அறிந்த மக்கள் பிற்பகல்முதல் குறித்த இடத்தில் காத்திருந்து எரிவாயு சிலிண்டர்களை பெற்றுச்சென்றனர்.


ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் மேற்பார்வையோடு லிட்ரோ எரிவாயு நிலைய ஊழியர்களால் எரிவாயு சிலிண்டர் விநியோகம் அமைதியான முறையில் இடம்பெற்றது.

இதன்போது 12.5 கிலோ எரிவாயு 700 சிலிண்டர்களும், 5 கிலோ எரிவாயு 50 சிலிண்டர்களும், 2.5 கிலோ எரிவாயு 50 சிலிண்டர்களும் வழங்கப்பட்டன.

இதன்பிரகாரம் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 5,270 ரூபாவிற்கும் 5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 2,200 ரூபாவிற்கும் வழங்கப்பட்ட நிலையில், சிலிண்டர்கள் பெறுகின்றவர்களிடமிருந்து மே மாத மின்சாரக் கட்டணப்பட்டியல் பெறப்பட்டு அதில் குறித்த வீட்டிற்கு சிலிண்டர்கள் வழங்கப்பட்டதை உறுதி செய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் ஒரு வீட்டிற்கு இரு சிலிண்டர்கள் வழங்கப்படும் செயற்பாடு இலகுபடுத்தப் பட்டுள்ளது. இதேநேரம் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 700 வழங்கப்பட்ட நிலையில், இன்னும் சிலரும் எரிவாயு சிலிண்டர்களைப் பெற காத்திருக்கின்றனர். ஆலையடிவேம்பு மக்கள் அமைதியான முறையில் சகல செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***அவசரகாலச் சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் உள்ள போக்கணம் கெட்ட எம்.பிமாரக்கொண்டு அந்த நரி நிறைவேற்றிப்போட்டாரு எலுவா?***

***மக்கள் எப்படி போனாலும் சரி நமக்கு பாதுகாப்பு வேண்டும் எண்ட மாதிரித்தான் அந்த 120 பொம்மைகளும் கையை உயர்த்தி இருக்குரது சோக்கா விளங்குது. இனி என்ன மூன்று வருஷமும் அமைச்சர் பதவியும் எடுத்து காலத்த ஓட்டுறதுக்குத்தான் எம்.பி. ஆக்கள் எல்லாம் முயற்சிக்கிறது வெட்ட வெளிச்சமா தெரியுது எலுவா?***

## நிர்வாக சேவை உத்தியோகத்தர் அஸ்மி கல்முனை மாநகர ஆணையாளராக நியமனம்



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். 22.07.2022 திகதியிடப்பட்ட G/EPC/A/GVR/Appt(291) இலக்க கடிதம் மூலம் 25.07.2022ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வரையில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர்கள், பல்வேறு பொது அமைப்புகள் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு முன்வைத்த குற்றச்சாட்டுகள் காரணமாக கல்முனை மாநகர சபையின் தற்போதைய ஆணையாளராக செயற்படும் எம்.சி.அன்சார், விசாரிக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் இடமாற்றம் செய்யப்பட்டு குறித்த பதவிக்கு பொறியியலாளர் ரி.சிவலிங்கம் நியமிக்கப்பட்டார். எனினும், அவர் பதவியேற்காமல் பலவந்தமாக தடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து மீண்டும் எம்.சி.அன்சார், கல்முனை மாநகர ஆணையாளராக செயற்பட்டார்.

இந்நிலையில், இலங்கை நிர்வாக சேவையின் முதல் வகுப்பைச் சேர்ந்தவரான அஸ்மி, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் பதவியிலிருந்து கல்முனை மாநகர ஆணையாளர் பதவிக்கு இடமாற்றப்பட்டுள்ளார். கல்முனை மாநகர சபையின் பதில் ஆணையாளராகவே தன்னை நியமிக்குமாறு அஸ்மி வேண்டுகோள் விடுத்த நிலையில், நிரந்தர ஆணையாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளராக வருடங்கள் சிறப்பாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு இளைஞர் அமைப்பின் 4 ஆவது மாநாடு சாய்ந்தமருதில்

(பொலிவேரியன் நிருபர்)

கிழக்கு இளைஞர் அமைப்பின் 4ஆவது ஆண்டு மாநாடு நாளை சனிக்கிழமை (30) காலை 9 மணிக்கு சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு இளைஞர் அமைப்பின் தலைவரும் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரு மான தானிஷ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யு.எல் நசார், நிந்தவூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எஸ்.ஜாரியா, சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.நௌஷானா, கல்முனை சாஹிராக் கல்லூரியின் பிரதி அதிபர் றிப்கா அன்ஸார், இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.றிஸ்வானுல் ஜன்னாஹ், கிழக்கு இளைஞர் அமைப்பின் பொதுச் செயலாளர் எம்.எம்.முபாரக் மற்றும் பணிப்பாளர் ஏ.சாபீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கிழக்கு இளைஞர் அமைப்பின் பிரதித் தலைவர் எஸ்.எம்.சம்சித், உதவித் தலைவர் எம்.எஸ்.ஏ. ஹர்பான், தொண்டர் ஒருங்கிணைப்பாளர் ஏ.ரீ.எம்.பைசின், பொருளாளர் ஆர்.எம். தன்சீம், தேசிய ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர்.எவ். சிரோனி, பிரதிச் செயலாளர் எம்.ஐ.எவ்.சஜ்னா, உதவித் தலைவர் பி.நிலூ, பெண்கள் ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.எப்.றிஸ்னா, பணிப்பாளர் எஸ்.சலீம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.எம்.எம்.மர்சூக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் முக்கிய நிகழ்வாக பிரதேச செயலாளராக இருந்து சாய்ந்தமருது மண்ணுக்கு வேற்றுமைகள் பாராது தம் பணியை செவ்வனே செய்து அரும்பணியாற்றிவரும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அவரது சேவையைப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மகளிர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னர் மறுசீரமைப்பு

**புதிய நிர்வாகம் தெரிவு**

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் வரலாற்று பழைமை வாய்ந்த சிக்கன மற்றும் கடன் வழங்கல் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றான சொறிக்கல்முனை 06ஆம் வட்டாரம் கிராமம் மகளிர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் ஒரு தசாப்த காலத்துக்கு பின் நேற்று முன்தினம் (27) புனரமைப்பு செய்யப்படது.

நாட்டில் கூட்டுறவு முறைமை அறிமுகப் படுத்தப்பட்டு சில வருடங்களில் பெண்களுக்கென தீர்க்கதரிசனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கம் 1980ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

ஆனால், யுத்தம் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தம் ஆகியவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளை தொடர்ந்து 2012ஆம் ஆண்டு துரதிர்ஷ்டவசமாக இது செயலிழக்க நேர்ந்தது.

இந்நிலையில், கல்முனை - அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் எஸ். லோகநாதனின் பகீரத முயற்சியில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆறுமுகம் நடராசலிங்கத்தின் வழிநடத்தலில் தற்போது இதற்கு புத்துயிர் கொடுக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவராக இராமன் காந்திமதி, உப தலைவராக மாதவன் தயாளினி, செயலாளராக



வேலு புவனேஸ்வரி, பொருளாளராக விஜயரட்ணம் ரூபிகா, நிர்வாக உறுப்பினர்களாக கண்ணன் புஷ்பம், சோணமுத்து நாகலச்சுமி, நேசதுரை ரஞ்சனி ஆகியோரைக்கொண்ட நடப்பாண்டு நிர்வாகம் சங்க உறுப்பினர்களால் ஒருமனதாக தெரிவுசெய்யப்பட்டது.

சமாசத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் இங்கு உரையாற்றியபோது, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும், நான் அரசியல் பேசவில்லை, நிர்வாக விடயங்கள் சம்பந்தப்பட்டுதான் சொல்கின்றேன், குறிப்பாக, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கட்டாயம் மாற்றப்பட வேண்டும், கிழக்கில் கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக நான் அவருக்கு மூன்று கடிதங்களை அனுப்பி, கையளித்திருந்தேன், அவரிடமிருந்து எந்த பதிலும் இதுவரை கிடைக்கவில்லை, அவர் வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர், இதனால் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்கிற பற்றுறுதி அவரிடம் கிடையாது, அதை அவரிடம் எதிர்பார்க்கவும் முடியாது, கிழக்கு மாகாணத்துக்கு தொடர்ந்தேச்சையாக வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர், இது முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும், இம்மாகாணத்தைச் சேர்ந்த பொருத்தமான ஒருவரே இம்மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் - என்றார்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நடராசலிங்கம் உரையாற்றியபோது, இக்கூட்டுறவுச் சங்கம் இன்னமும் அதிக உறுப்பினர்களை உள்வாங்கி இயங்க வேண்டும், எதிர்காலத்தில் பிரம்மாண்டமான சாதனைகளை படைக்க வேண்டும், அங்கத்துவம் வகிக்கின்ற மகளிர்களின் வாழ்வாதாரத்தை கணிசமான அளவில் முன்னேற்ற வேண்டும் - என்று வாழ்த்தினார்.

## மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய தேரோட்டம்



(கல்லடி நிருபர்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஒன்பதாவது நாளான நேற்று முன்தினம் (27) அடியார்களின் தேவார பாராயணம் மற்றும் மேள வாத்தியங்கள் முழங்க, அடியவர்கள் வடம் பிடித்து இழுக்க, மாமாங்கேஸ்வரர் சித்திரத் தேரிலேறி, ஆலய வளாகத்தைச் சுற்றி வலம் வந்தார்.

இத்தேரோட்டப் பெருவிழாவில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மாமாங்கேஸ்வரர் ஆலய உற்சவம் கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுத தாக்குதலை நடத்த வடகொரியா தயார்

## கிம் ஜோங் வுன் தெரிவிப்பு



அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுத தாக்குதலை நடத்த வடகொரியா முழுஅளவில் தயாராக இருக்கிறது என அதன் தலைவர் கிம் ஜோங் வுன் கூறியுள்ளார். பியாங்யாங், ஆசிய நாடுகளில் ஒன்றான வடகொரியாவின் தலைவராக கிம் ஜோங் வுன் கடந்த 2011ஆம் ஆண்டு பதவியேற்று முதல் தொடர்ச்சியாக சக்தி வாய்ந்த ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை அந்நாடு சோதித்து வந்தது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்களை மீறி இந்த சோதனைகளை நடத்தியதால் வடகொரியா மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடுமையான பொருளாதார தடைகளை விதித்தன. இந்நிலையில், அந்த நாடு கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணையை சோதித்து அண்டை நாடுகளையும், அமெரிக்காவையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

04 ஆண்டுகளுக்கு பிறகு இதுபோன்ற சோதனையை வடகொரியா நடத்தியுள்ளது. இந்த சூழலில், கொரிய போரின் 69ஆவது ஆண்டு தின நிகழ்வை நினைவுகூரும் வகையில் நடந்த கொண்டாட்ட நிகழ்ச்சியில் வடகொரிய தலைவர் கிம் ஜோங் வுன் கலந்துகொண்டு பேசினார். அவர் பேசும்போது, அமெரிக்காவுடனான மோதல் போக்கு அணு ஆயுத ஆபத்துகளை உருவாக்கிவிட்டது. சுய பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை வடகொரியா எடுக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டு விட்டது.

எந்த நெருக்கடியையும் எதிர்கொள்ள எங்களுடைய ஆயுதப் படைகள் முழு அளவில் தயாராக உள்ளன. இதேபோன்று, எங்கள் மீது நடத்தப்படும் அணு ஆயுதப் போரைத் தடுக்கும் வகையில், நாங்கள் நம்பிக்கையுடன், துல்லியமுடன் மற்றும் சரியான முறையில் பதிலடி கொடுக்க முழு அளவில் தயாராக இருக்கிறோம் என கூறியுள்ளார். அமெரிக்காவுடனான எந்த ஒரு இராணுவ மோதலையும் எதிர்கொள்ள, வடகொரியா முழுஅளவில் தயாராக இருக்கிறது என நான் மீண்டும் தெளிவுப்படுத்தி கொள்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

போர் நடந்து 70 ஆண்டுகள் கழித்தும், தென்கொரியாவுடன் சேர்ந்து கொண்டு, வடகொரியாவுக்கு எதிராக ஆபத்து நிறைந்த, சட்டவிரோத பகைமை விளைவிக்கும் செயல்களில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. தனது செயல்களுக்கு ஆதரவு சேர்க்கும் வகையில் வடகொரியாவை அச்சுறுத்த முயற்சிக்கிறது என அவர் கூறியுள்ளார்.

# சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி

## ஆரம்ப நிகழ்வில் பங்கேற்கவிருந்த கலைக்குழுவில் நால்வருக்கு கொவிட்


செஸ் ஒலிம்பியாட் போட்டி ஆரம்ப நிகழ்வில் பங்கேற்கவிருந்த கலைக்குழுவில் 04 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் 44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான ஆரம்பவிழா நேற்று மாலை நடைபெற்றது. இந்தப் போட்டியை பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்தார். இந்த ஆரம்ப விழாவில், பல்வேறு நாடுகளை சேர்ந்த செஸ் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கலந்துகொள்ளவுள்ள நிலையில், பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், விழாவில் பங்கேற்கும் கலைக்குழுவினர் உட்பட 900 பேருக்கு கொவிட் பரிசோதனை செய்ததில், கலைக்குழுவைச் சேர்ந்த 04 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் 2028 வரை ரஷ்யா நீடிக்கும்

## நாசா தகவல்



ரஷ்ய அரசின் விண்வெளி ஆய்வு நிறுவனம் ரோஸ் கோஸ்மாஸ். அதன் புதிய தலைவராக யூரி போரிசோவ் இந்த மாத தொடக்கத்தில் நியமிக்கப்பட்டார். அவர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்தார். அப்போது போரிசோவ் கூறுகையில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து ரஷ்யா 2024ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளியேறுவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா சார்பில் தனி விண்வெளி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இந்த நிலையில், ரஷ்யாவின் சொந்த விண்வெளி நிலையம் கட்டப்பட்டு செயல்படும்வரை ரஷ்ய விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தை பயன்படுத்துவார்கள் என அமெரிக்க விண்வெளி நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பதிலாக மேலும் ஆறு ஆண்டுகளுக்கு அமெரிக்காவுடன் ரஷ்யா தனது விண்வெளி கூட்டுறவை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாசாவின் விண்வெளி செயல்பாட்டுத் தலைவர் கேத்தி லூடர்ஸ் உறுதிபடுத்தியுள்ளார்.

# வேதாரண்யம் கோடியக்கரையில் ஆடி அமாவாசை வழிபாடுகள்

## புனித நீராடி முன்னோர்களுக்கு பிதிர்க்கடன்



ஆடி அமாவாசை தினத்தையொட்டி நாகை மாவட்டம், வேதாரண்யம், கோடியக்கரை கடற்பரப்பில் ஏராளமான மக்கள் நேற்று புனித நீராடி தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபட்டு வருகின்றனர்.

வேதாரண்யம் மற்றும் ஆதி சேது எனப்படும் கோடியக்கரை கடல் பகுதியில் தை, ஆடி அமாவாசை, அர்த்தோயம், மகோதயம், மாசி மகம் ஆகிய நாட்களில் புனித நீராடல் செய்யும் மக்கள் தங்கள் முன்னோர்களுக்கு திதி கொடுப்பது வழக்கம்.

**கடலில் நீராடல்**

அந்த வகையில், ஆடி அமாவாசை நாளான நேற்று பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஏராளமான மக்கள் அதிகாலை தொடங்கி புனித நீராடல் செய்தனர்.

கோடியக்கரை முழுக்குத்துறையில் நீராடியவர்கள், தங்களது முன்னோர்கள் நினைவாக தர்ப்பணம் (நீர்சடங்கு) செய்தனர். பின்னர் அங்குள்ள சித்தர் கோயில், ராமர் பாதம் உள்ளிட்ட இடங்களில் வழிபட்டனர்.

**முன்னோர்களுக்கு தர்ப்பணம்**

அதேபோல், வேதாரண்யம் சன்னதி கடல் பரப்பில் நீராடி, முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்த மக்கள், வேதாரண்யம் வேதாரண்யேசுவரர் கோயிலில் இறைவனை வழிபட்டனர்.

# ஜேர்மனியில் லுப்தான்ஸா நிறுவனத்தினரின் 1000 விமானங்கள் சேவையிலிருந்து இரத்து



## ஒன்றரை இலட்சம் பயணிகள் பாதிப்பு

ஜெர்மனியின் மிகப்பெரிய தனியார் விமான நிறுவனம் லுப்தான்சா. உள்நாட்டிலும் ஐரோப்பா முழுவதிலும் அதிகப்படியான விமான சேவைகளை வழங்கி வரும் இந்த நிறுவனம், பயணிகளின் எண்ணிக்கையில் ஐரோப்பாவின் 2ஆவது பெரிய விமான நிறுவனமாக உள்ளது. இந்த நிலையில், லுப்தான்சா விமான நிறுவனத்தின் ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி நேற்று முன்தினம் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் லுப்தான்சா நிறுவனம் 1,000க்கும் அதிகமான விமானங்களை இரத்துச்செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டது. இதன்காரணமாக சுமார் 1,34,000 பயணிகள் தங்கள் பயணத் திட்டங்களை மாற்ற அல்லது முழுவதுமாக இரத்துச் செய்ய வேண்டியிருந்தது.

# விண்வெளி வீரரின் உடை 22.37 கோடி ரூபாவுக்கு ஏலம்




நிலவில் இரண்டாவதாக தரையிறங்கிய அமெரிக்க விண்வெளி வீரர் எட்வின் ஆல்ட்ரினின் விண்வெளி சட்டை 22.37 கோடி ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

1969இல் அமெரிக்க விண்வெளி மையமான நாசா 1969 ஜூலை 16இல் அப்பல்லோ 11 விண்கலத்தை நிலவுக்கு அனுப்பியது. இதில் கமாண்டர் நீல் ஆம்ஸ்டிராங், பைலட் எட்வின் ஆல்ட்ரின், பைலட் மைக்கேல் காலியன்ஸ் ஆகிய மூன்று வீரர்கள் பயணித்தனர். இது ஜூலை 20இல் நிலவில் இறங்கியது. ஆறு மணி நேரம் கழித்து விண்கலத்திலிருந்து இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ராங், நிலவில் முதலில் காலடி வைத்தார். பின் 20 நிமிடம் கழித்து எட்வின் ஆல்ட்ரின் இறங்கி சாதித்தார்.

இந்நிலையில் அப்போது ஆல்ட்ரின் அணிந்திருந்த விண்வெளி சட்டை, ஏலம் விடப்பட்டதில் 22.37 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது. ஆல்ட்ரினின் தற்போதைய வயது 92. மற்ற இருவரும் இறந்துவிட்டனர்.

# அங்கோலாவில் 170 கரட் மதிப்புடைய இளஞ்சிவப்பு நிற வைரம் கண்டுபிடிப்பு



மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான அங்கோலா, வைரங்களை உற்பத்தி செய்யும் உலகின் முதல் 10 நாடுகளில் ஒன்றாக உள்ளது. அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைரங்களை வெட்டி எடுக்கும் சுரங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், அங்கோலாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள லூலோ நகரில் அவுஸ்திரேலியாவின் லுகாபா வைர நிறுவனத்துக்கு சொந்தமான சுரங்கத்தில் மிகப்பெரிய இளஞ்சிவப்பு நிற வைரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு 170 கரட் என கணக்கிடப்பட்டுள்ளது. இது, உலகில் கடந்த 300ஆண்டுகளில் கிடைத்த மிகப்பெரிய இளஞ்சிவப்பு நிற வைரம் என லுகாபா வைர சுரங்க நிறுவனம் தெரிவித்துள்ளது.

லூலோ நகரில் கண்டெடுக்கப்பட்டதால், அந்த வைரத்துக்கு லூலோ ரோஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

தற்போது இந்த இளஞ்சிவப்பு நிற வைரம் அங்கோலாவில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

## உலக செய்திகள்

# செஸ் ஒலிம்பியாட் போட்டியில் உணவுத் திருவிழா




மாமல்லபுரத்தை அடுத்த பூஞ்சேரி கிராமத்தில் 44ஆவது சர்வதேச அளவிலான செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் நேற்று மாலை தொடங்கி 14 நாட்கள் நடைபெறுகிறது. இந்தப் போட்டிகளில் பங்கேற்க 180 நாடுகளைச் சேர்ந்த 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் சென்னை வந்துள்ளனர்.

இதையொட்டி, மாமல்லபுரத்தில் பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், வெளிநாடுகளைச் சேர்ந்த வீரர்களுக்கு அந்தந்த நாடுகளின் உணவு வகைகள் மூலம் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


இந்த விருந்தில் 77 மெனு கார்டுகள் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 53 மெனு கார்டுகள் இறுதிசெய்யப்பட்டிருக்கின்றன. சிற்றுண்டிகள் மற்றும் சாஸ்கள் உட்பட 3500க்கும் மேற்பட்ட வெரைட்டிகள் உள்ளன. 700 உணவு வகைகள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும், இதில் பெரும்பாலான உணவு வகைகள் ஐரோப்பிய உணவு வகைகளைச் சேர்ந்தது என்றும் கூறப்படுகிறது.

இதில் சிறப்பு என்னவென்றால், ஒருநாள் அளிக்கப்படும் உணவு வகைகள் மறுநாளும் வராமலிருக்க ஒவ்வொரு நாளும் புதிய வகை மெனுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். மேலும், இந்த உணவு ஏற்பாடுகளின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் கவனிக்கத் தனி குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பிரம்மாண்ட உணவு ஏற்பாடுகளை இந்தியாவின் முன்னணி சமையற் கலைஞரான சென்னையைச் சேர்ந்த ஜி.எஸ்.தல்வார் ஏற்பாடு செய்துள்ளார். செஸ் போட்டிகள் முடியும்வரை (ஜூலை 28முதல் ஓகஸ்ட் 10ஆம் திகதிவரை) செஸ் திருவிழாவோடு சேர்த்து இந்த உணவுத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

# பிரிட்டனில் கொள்ளையிடப்பட்ட ரூ. 247 கோடி மதிப்புள்ள நகைகள்

## தகவல் தருவோருக்கு ரூ. 57 கோடி சன்மானம்





பிரிட்டனைச் சேர்ந்த பெண் ஒருவரின் வீட்டிலிருந்து 247 கோடி ரூபா மதிப்புள்ள நகைகளை மர்ம நபர்கள் திருடியுள்ளதாக புகார் எழுந்துள்ளது. திருடப்பட்ட நகைகள் குறித்த தகவல் கொடுப்போருக்கு 57 கோடி ரூபா சன்மானம் அளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்முலா வன் கார் பந்தைய போட்டிகளை நடத்தும் நிறுவனத்தை நடத்திவரும் தொழிலதிபர் பெர்னி எக்லெஸ்டோன் என்பவரது மகள் தமரா. இவர் கடந்த 2019இல் தனது கணவர், மகளுடன் லண்டனில் இருந்து பின்லாந்துக்கு தனி விமானத்தில் சென்றுள்ளார்.

அப்போது லண்டன் வீட்டில் மிகப்பெரிய திருட்டு நடந்துள்ளது. வீட்டின் ஒவ்வொரு அறையையும் கொள்ளையர்கள் சூறையாடியதுடன், விலையுயர்ந்த நகைகள், கடிகாரங்கள் உள்ளிட்ட பல பொருட்களையும் திருடியுள்ளனர். இதன் மதிப்பு 247 கோடி ரூபா எனக் கூறப்படுகிறது.

திருட்டு நடந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதனால் விரக்தியடைந்த தமரா, தனது நகைகளை சட்டப்படி மீட்க நீண்ட நாட்கள் காத்திருந்தும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை எனக்கூறி புது அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதாவது, கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் குறித்த தகவல் கொடுப்போருக்கு நகைகள் மீட்கப்பட்டால், மீட்கப்பட்ட நகைகளின் மதிப்பில் 25 சதவீதம் அல்லது ரூ.57 கோடியை சன்மானமாக வழங்கத் தயாராக உள்ளதாக தமரா அறிவித்துள்ளார். இந்த மிகப்பெரிய திருட்டு சம்பவத்தில் இதுவரை ஒரே ஒரு ஜோடி தோடு மட்டுமே மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வத்தளையிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த கார் தீக்கிரை

வத்தளையிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த அதிசொகுசு காரொன்று தம்மென்னாவ மாணிக்கக்கல் சந்திக்கு அருகில் திடீரென தீப்பரவலுக்குள்ளாகியுள்ளதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சேதத்துக்குள்ளான காரின் பெறுமதி 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா என அந்த காரின் சாரதி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

வத்தளை, எடேரமுல்ல, புகையிரத நிலையத்தைச் சேர்ந்த நபரொருவர் அவரின் நண்பரொருவருடன் அதிவேக நெடுஞ்சாலையினூடாக வத்தளை லுனுகம்வெஹரவினூடாக கதிர்காமம் நோக்கி சென்று'கொண்டிருந்தபோது



கடந்த 26ஆம் திகதி இரவு 11 மணியவில் குறித்த கார் இவ்வாறு தீக்கிரையாகி உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# அமைச்சர் அலி சப்ரி - இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மரியாதை நிமித்தம் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இலங்கையின் புதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை அண்மையில் அமைச்சில் வைத்து மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, தற்போதைய பொருளாதார சவால்களின் பின்னணியில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகள் குறித்து உயர்ஸ்தானிகர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு விளக்கமளித்தார். குறிப்பாக, இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இந்திய மக்களுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்று வரும் இருதரப்பு ஈடுபாடுகளின் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சப்ரி மற்றும் உயர்ஸ்தானிகர் பாக்லே ஆகியோர் கலந்துரையாடியதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக ஒத்துழைப்பு குறித்து திருப்தி வெளியிட்டனர்.

# மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் இயங்கும் மெதிரிகிரிய மருத்துவமனை

மின்சாரம் துண்டிக்கப்படும் சமயங்களில் மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலையின் பணிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மின்வெட்டு நேரத்தில், மெழுகுவர்த்தி வெளிச்சத்திலும், கைபேசி வெளிச்சத்திலும் மருத்துவமனை பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன .

இதனால் அவசர நோயாளிகள், சுவாச நோயாளிகள் மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படுபவர்களை பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு வைத்தியசாலை ஊழியர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

மின்சாரம் தடைப்பட்டால் உயிர்காக்கும் கருவிகள் வேலை செய்யமுடியாத நிலை ஏற்படுவதாகவும் பல்வேறு வெப்பநிலையில் சேமித்து வைக்கவேண்டிய மருந்துகள் உள்ளிட்ட பல மருந்துகள் மற்றும் மருந்துவ சாதனங்கள் பழுதடைவதாகவும் மருத்துவமனை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலையின் மின்சார ஜெனரேட்டருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு சுமார் 25 லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதாகவும் இந்த நாட்களில் சுமார் மூன்று மணித்தியாலங்கள் மின்வெட்டினால் நாளொன்றுக்கு சுமார் 75 லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதாகவும் எரிபொருள் கிடைக்காததால் மின்வெட்டு சமயங்களில் மருத்துவமனை இருளில் மூழ்குவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# எரிபொருள் நெருக்கடியின் மத்தியிலும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடரும்

## ரோசி சேனாநாயக்க சுட்டிக்காட்டு



எரிபொருள் நெருக்கடியை பொருட்படுத்தாது டெங்கு தடுப்பு வேலைத்திட்டங்கள் தொடரும் - என கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

புகைபிடிக்கும் இயந்திரங்களுக்கு எரிபொருள் இல்லாத காரணத்தினால் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருப்பதால், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடரும்.

கொவிட் -19இற்கு எதிராக தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், ஒரு மீற்றர் இடைவெளி பேணுதல், கைகளை நன்கு கழுவுதல் மற்றும் கை சுத்திகரிப்பை பயன்படுத்துதல் போன்ற கொவிட்-19 நெறிமுறைகள் தொடர வேண்டுமெனவும் மேயர் வலியுறுத்தியுள்ளார்.

# குரங்கு அம்மை நோய் ஒரு புதிய நோய் அல்ல!

## மக்கள் தேவையின்றி அச்சப்படவேண்டிய அவசியமில்லையென விசேட வைத்திய நிபுணர் சமித தெரிவிப்பு



தற்போது பெரிதும் பேசப்படுகின்ற குரங்கு அம்மை நோய் ஒரு புதிய நோய் அல்ல என்றும் 1970 ஆம் ஆண்டு மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இது முதன்முதலில் பதிவாகியதாகவும் தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சமித கினிகே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இது அதிபயங்கரமான தொற்றுநோய் நிலை என்று தெரிவிக்கப்படவில்லை, கடந்த சில மாதங்களில் ஒரே நேரத்தில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து நோயாளிகள் பதிவாகியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோய் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுவாக சருமத்தில் (முகம், கைகால், வாய்) கொப்புளங்கள், காய்ச்சல், நிணநீர்க் குழாய்களில் வீக்கம், உடல் சோர்வு போன்றவை இதன் அறிகுறிகளாகும். இதற்குத் தேவையற்ற விதத்தில் அச்சம் கொள்ள வேண்டாம். மேலும் ஒப்பீட்டளவில், இது கொவிட் போன்று பெரியளவில் பரவுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு தொற்றாளரால் இன்னொருவருக்கு மாத்திரமே இந்த நோய் பரவக்கூடும். மேலும் இது சமூகத்தில் வேகமாகப் பரவக்கூடியதும் அல்ல, ஆபத்தானதும் அல்ல. நோய் தொற்றுள்ள ஒருவருடன் நெருங்கிப் பழகக் கூடியவர்களுக்கு மாத்திரமே இந்த தொற்று ஏற்படக்கூடும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுவரையிலும், தெற்காசியாவில் மூன்று நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியுள்ளனர். இதற்கான சுகாதார கட்டமைப்பு தயார்படுத்தப் பட்டுள்ளது. மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் விசேட வைத்திய நிபுணர் சமித்த கினிகே மேலும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு இணைப்பாளர் - இராணுவத் தளபதி சந்திப்பு

கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட லெப்டினன் கேர்ணல் அந்தோனி சி. நெல்சன் நேற்று முன்தினம் (27) இராணுவ தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவை உத்தியோகபூர்வமாக சந்தித்தார்.

இருவருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது, இரு நாடுகளின் ஆயுதப் படைகளுக்கு இடையே நிலவும் நல்லெண்ணம், ஒத்துழைப்பு மற்றும் புரிந்துணர்வின் பிணைப்புகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதோடு, இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சித் திட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பல்வேறு பரிமாற்ற திட்டங்கள் மற்றும் பிற பொதுவான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதரகத்தின் உதவி பாதுகாப்பு இணைப்பாளர் செத் நெவின்ஸ் மற்றும் இராணுவச் செயலாளர் மேஜர் ஜெனரல் ஸ்வர்ண போதோட்ட ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு உடன் அமுலுக்கு வரும்வகையில் கலைப்பு

இலங்கையில் கல்வி மேம்பாடு, விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தலுக்கான பரிந்துரைகளுக்கென முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு, உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் கே.ஆர்.பத்மப்பிரிய இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டாபய ராஜபக்ஷ, அரசியலமைப்பின் 33ஆவது உறுப்பரைக்கமைவாக ஜனாதிபதிக்கு உண்டான அதிகாரத்தின்படி, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி, 2169/2ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கையில் கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவை ஸ்தாபித்தார்.

ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் கல்வியை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்குவதும், காலத்துக்குக்காலம் கல்வி முன்னேற்றம் பற்றி அறிக்கைகளை வழங்குவதும் இந்த ஆணைக் குழுவின் பிரதான செயற்பாடுகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தன.

இலங்கையின் மூத்த துறைசார் நிபுணர்கள், கல்வியியலாளர்கள், அனைத்துப் பல்கலைக் கழகங்களினது துணைவேந்தர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிப்பாளர்கள் உட்பட 31 பேர் ஸ்தாபக உறுப்பினர்களாக நியமக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தை அடுத்து இந்த ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளதாக 27.07.2022ஆம் திகதிய கடிதம் மூலம் தனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் குறப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆட்சிமாற்றத்தின் பின், முன்னாள் ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் ஆணைக்குழுக்களின் உயர் பதவிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்று அரச உயர்மட்டத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


# கப்பலைக் கொண்டுவருவதற்கு சென்று அமெரிக்காவில் தலைமறைவான நபர்கள்

இலங்கைக்கு அமெரிக்காவினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள கரையோர பாதுகாப்புக் கப்பலை இலங்கைக்கு கொண்டுவருவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றவர்களில் 9 பணியாளர்கள் அங்கு தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கப்பலை இலங்கைக்கு கொண்டுவருவதற்காக நூற்றுக்கும் மேற்பட்டோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இந்தக் கப்பல் இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என கடற்படை தெரிவித்துள்ளது.

# இஸ்லாமிய அறிஞர் அபூபக்கர் அல் அதனி மசூர் மௌலானா காலமானார்

(பேருவளை பி.எம்.முக்தார்)



மத்தியகிழக்கு நாட்டின் சமகால இஸ்லாமிய மார்க்க அறிஞர்களில் ஒருவராக கருதப்படும் பிரபல ஆன்மிக பெரியார்களில் ஒருவரும் பன்னுலாசிரியருமான அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அபூபக்கர் அல்-அதனி மசூர் மௌலானா ஜோர்தானில் நேற்று 27ஆம் திகதி காலமானார்.

ஜோர்தானிலுள்ள அம்மான் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் காலமானார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளராக பதவிவகித்த அஷ்ஸெய்யித் அப்துல் காதர் மசூர் மௌலானாவின் பெரிய தந்தையுமாவார்.

இவரது ஜனாஸா ஜோர்தானிலிருந்து விசேட விமானம் மூலம் அவரது தாயக பூமியான யெமன் ஹலரமௌத் அடக்கஸ்தலத்தில் இன்று 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுபஹ் தொழுகையின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும் என அஷ்ஸெய்யித் அப்துல் காதர் மசூர் மௌலானா தெரிவித்தார்.

யெமன் நாட்டைப் பூர்வீகமாகக்கொண்ட இவர், முஹம்மது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். பாஅலவி சாதாத் வழிமுறையில் அல்மஷ்ஹூர் குடும்பத்தைச் சேர்ந்த இவர், யெமன் நாட்டின் ஹலரமௌத் பகுதியை பூர்வீகமாகக் கொண்டிருந்தாலும் சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் நீண்டகாலமாக வசித்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

செய்ஹ் ஹபீப் அபூபக்ர் அல் மஷ்ஹூர் சமகால இஸ்லாமிய பிக்ஹ் துறையில் அறிமுகம் செய்த முக்கிய திருப்பமாக "பிக்ஹ் அல் தஹாவுலாத்" "மறுமைநாள் பற்றிய சட்டங்கள்" என்ற அம்சம் பிரதானமாகும். நவீன காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அதாவது பித்னாக்களுக்கு இஸ்லாமிய வரையறைக்குள் எவ்வாறு தீர்வுகாண்பது என்ற விடயத்தை பல தசாப்தங்களாக ஆய்வுசெய்து நூற்றுக்கணக்கான நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

# மறைந்த இஸ்லாமிய அறிஞருக்காக ஜனாஸா தொழுகை நடத்துமாறு வேண்டுகோள்

(பேருவளை பி.எம்.முக்தார்)

ஜோர்தானில் காலமான யெமன் நாட்டு இஸ்லாமிய மார்க்க அறிஞரும் அலவிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவரும் பன்னுலாசிரியருமான அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அபூபக்கர் அல் அதனி மசூர் மௌலானாவுக்காக இன்று 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் அன்னாருக்காக ஜனாஸா தொழுகையை நடத்தி அன்னார் இஸ்லாத்திற்கும், இஸ்லாமிய தஃவா பணிக்கும், கல்விப் பணிக்கும் ஆற்றிய மகத்தான பணிகளுக்காக துஆப் பிரார்த்தனை நடத்துமாறு ஸ்ரீலங்கா ஷரீஆ கவுன்சில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதன் பொதுச் செயலாளரும் வத்தளை அபூஹுரைரா அரபுக் கல்லூரி அதிபரும் கொழும்பு பெரியபள்ளிவாசல் பிறைக்குழு தலைவருமான கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி முஹம்மத் ஹிசாம் (பத்தாஹி) இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேருவளை சீனன்கோட்டையிலுள்ள ஆறு ஜும்ஆ பள்ளிவாசல்களிலும் இன்றைய தினம் ஜும்ஆ தொழுகையின் பின்னர் அன்னாருக்காக ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெறும் என சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார் தெரிவித்தார்.

இலங்கையின் அலவிய்யா தரீக்காவின் தலைமையகமான வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை கெச்சிமலை தர்காவிலும் இன்றைய தினம் அன்னாருக்காக ஜனாஸா தொழுகை, கத்தமுல் குர்ஆன் மற்றும் விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்ச்சிகள் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் இலங்கை வக்பு சபை உறுப்பினருமான மௌலவி ஸக்கி அஹமட் பின்த் அஷ்ஷெய்ஹ் காலிப் அலவி ஆலிம் அலவியத்துல் காதிரி (அஷ்ரபி) தலைமையில் இடம்பெறவுள்ளன.

# பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்து தொடரை சமநிலைப்படுத்திய இலங்கை



பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியுடனான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் 246 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்ற இலங்கை அணி தொடரை 1-1 என்ற அடிப்படையில் சமநிலைப்படுத்தியது.

முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங்ஸில் 378 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

147 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி, தனஞ்ஜய டி சில்வாவின் அபார சதத்துடன் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 360 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. அதன்படி 508 என்ற மிகப்பெரிய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 89 ஓட்டங்களை பெற்றிருந்தது.

நேற்று போட்டியின் இறுதி நாளில் இலங்கை அணியின் வெற்றிக்காக 9 விக்கெட்டுகள் தேவைப்பட்ட நிலையில் சுழற்பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல்போன பாகிஸ்தான் அணி 261 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோனது. போட்டியின் ஆட்டநாயகனாக தனஞ்ஜய டி சில்வா தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக 17 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரபாத் ஜெயசூரிய தெரிவானார்.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

# செஸ் ஒலிம்பியாட்டில் துணிச்சலாக பங்கேற்கும் 8 மாத கர்ப்பிணி





(ரமணி)

உலக செஸ் போட்டிகளில் 22 ஆண்டுகளாக விளையாடி வரும் ஹரிகா, சென்னை மாமல்லபுரத்தில் நடைபெறும் செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 8 மாத கர்ப்பிணியாக துணிச்சலாகப் பங்கேற்கிறார்.

யார் இந்த கிராண்ட் மாஸ்டர் ஹரிகா?

12 வயதில் ஆசியாவின் இளம் கிராண்ட் மாஸ்டரான ஹரிகா, உலக செஸ் போட்டிகளிலும், இந்திய செஸ் போட்டிகளிலும் கடந்த 22 ஆண்டுகளாக விளையாடி வருகிறார். ஹரிகா தற்போது உலகின் பத்தாம் நிலை வீராங்கனையாக இருக்கிறார். இந்தியாவின் ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த ஹரிகா, தனது 6 வயதுமுதல் செஸ் விளையாடி வருகிறார்.

9ஆவது வயதில் பத்து வயதுக்குட்பட்ட சிறுமிகள் பங்கேற்ற உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்று அனைவரையும் திரும்பிப் பார்க்கச் செய்தார்.

ஹரிகா இதுவரை 3 முறை உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். தேசிய அளவில் 16 பட்டங்கள் உட்பட 45இற்கும் அதிகமான பட்டங்களை பெற்றுள்ளார். ஹரிகா கடந்த 2011ஆம் ஆண்டு சர்வதேச அளவில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றார். இதன்மூலம் ஹரிகா இந்தியாவில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற இரண்டாவது பெண் என்ற சாதனையைப் படைத்தார்.

இந்தியாவில் ஹரிகாவுக்குப் பிறகு எந்தப் பெண்ணும் இதுவரை கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெறவில்லை என்பதே அவருடைய சாதனைக்கு சான்று. இந்நிலையில், கிராண்ட் மாஸ்டர் ஹரிகா தற்போது 44ஆவது செஸ் ஒலிம்பியாட் தொடரில் 8 மாத கர்ப்பிணியாக துணிச்சலாகப் பங்கேற்கிறார். செஸ் ஒலிம்பியாட் போட்டிகளில் ஹரிகா பங்கேற்பது இந்த ஒலிம்பியாட்டில் கவனம் பெற்றுள்ளது.

# எஸ்.எல்.சி. இன்விடேஷனல் ரி20 லீக் தொடருக்கான குழாம்கள் அறிவிப்பு

## குசல், அவிஷ்க, மெத்யூஸ் ஆகியோருக்கு இடமில்லை



### எஸ்.எல்.சி. ரெட்ஸ்

குசல் மெண்டிஸ் (தலைவர்), லசித் குரூஸ்புள்ளே, பானுக ராஜபக்ஷ, கமிந்து மெண்டிஸ், வனிந்து ஹஸரங்க, சஹான் ஆராச்சிகே, துனித் வெல்லாலகே, லஹிரு மதுசங்க, மதீஷ பத்திரண, மஹீஷ் தீக்ஷன, துஷ்மந்த சமீர, பபசர வதுகே, கலன பெரேரா, கெவின் கொத்திகொட, சிதார கிம்ஹான்.

### எஸ்.எல்.சி. புளூஸ்

சரித் அசலங்க (தலைவர்), தனுஷ்க குணதிலக்க. சதீர சமரவிக்ரம, தனஞ்ஜய டி சில்வா, அஷேன் பண்டார, சாமிக்க கருணாரத்ன, சுமிந்த லக்ஷான், பிரமோத் மதுசான், லஹிரு குமார, பிரவீன் ஜயவிக்ரம, கசுன் ராஜித, லஹிரு உதார, லஹிரு சமரகோன், அஷேன் டேனியல், நிபுன் ரன்சிக.

### எஸ்.எல்.சி. கிரீன்ஸ்

தசுன் ஷானக்க (தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, நிரோஷன் டிக்வெல்ல, நுவனிந்து பெர்னாண்டோ, தினேஷ் சந்திமால், தனஞ்ஜய லக்ஷான், ரமேஷ் மெண்டிஸ், பினுர பெர்னாண்டோ, நுவான் துஷார, ஜெப்ரி வெண்டர்சே, லக்ஷான் சந்தகன், சுமிந்த பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, நிமேஷ் விமுக்தி, சச்சிந்து கொலம்பகே.

### எஸ்.எல்.சி. கிரேஸ்

அஷான் பிரியன்ஜன் (தலைவர்), அஷான் ரந்திக, சங்கீத் குரே, பி.டி.எம்.தாபரே, மினோத் பானுக்க, மொவின் சுபசிங்க, முதித லக்ஷான், அகில தனஞ்ஜய, துவிந்து திலகரட்ன, மிலான் ரத்நாயக்க, லக்ஷான் கமகே, நிம்ஷார அதரகல்ல, புலின தரங்க, தரிந்து ரத்நாயக்க, கசுன் விதுர அதிகாரி.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாக நடைபெறவுள்ள எஸ்.எல்.சி. இன்விடேஷனல் ரி20 லீக் தொடருக்கான நான்கு அணிகளினதும் குழாம்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதுடன், தொடருக்கான போட்டி அட்டவணையும் அறிவிக்கப்பட்டது.

எஸ்.எல்.சி. ரெட்ஸ், எஸ்.எல்.சி. புளூஸ், எஸ்.எல்.சி. கிரீன்ஸ் மற்றும் எஸ்.எல்.சி. கிரேஸ் ஆகிய நான்கு அணிகளில் ஒரு குழாத்துக்கு 15 வீரர்கள் என மொத்தமாக 60 வீரர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். இதில் ரெட்ஸ் அணியின் தலைவராக குசல் மெண்டிஸ் பெயரிடப்பட்டுள்ளதுடன், புளூஸ் அணியின் தலைவராக சரித் அசலங்க, கிரீன்ஸ் அணியின் தலைவராக தசுன் ஷானக்க மற்றும் கிரேஸ் அணியின் தலைவராக அஷான் பிரியன்ஜன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள் ளனர்.

இதேவேளை, அறிவிக்கப்பட்டுள்ள இந்த குழாம்களில் முன்னணி வீரர்களான பானுக்க ராஜபக்ஷ, வனிந்து ஹஸரங்க, பெதும் நிஸ்ஸங்க, தினேஷ் சந்திமால், துஷ்மந்த சமீர, தனுஷ்க குணதிலக்க மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், பல இளம் வீரர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், உபாதையிலிருந்து மீண்டுவரும் குசல் பெரேரா, அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் அனுபவ வீரர் அஞ்சலோ மெத்யூஸ் ஆகியோர் இந்த குழாம்களில் இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த தொடர் எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் 16ஆம் திகதிவரை கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 2027 ஐ.சி.சி. மகளிர் சம்பியன்ஸ் கிண்ணம் இலங்கையில்



சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் அடுத்த 4 ஆண்டுகளில் மகளிருக்கான ஐ.சி.சி. போட்டிகள் நடைபெறும் நாடுகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி, 2025ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ணத் தொடரை நடத்துவதில் இந்தியா வெற்றிபெற்றது. 2013இற்குப் பிறகு இந்தியா மகளிர் உலகக்கிண்ணத்தை நடத்துவது தனிச்சிறப்பு.

மேலும், 2024 மற்றும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ணம் பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. 2027ஆம் ஆண்டு முதல் தடவையாக நடைபெறவுள்ள மகளிர் சம்பியன்ஸ் கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பை இலங்கை வென்றுள்ளது.

இருபதுக்கு 20 முறையில் நடைபெறும் இந்தப் போட்டியில் 6 அணிகள் விளையாடவுள்ளன. ஆனால், இலங்கை அணி போட்டிக்கு தகுதி பெறத் தவறினால், போட்டி நடத்தும் வாய்ப்பை இலங்கை இழக்க நேரிடும் எனவும் கருதப்படுகிறது.

# ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்றப்பட்ட ஆசியக்கிண்ணம்



2022ஆம் ஆண்டுக்கான ஆசியக்கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர், இலங்கையிலிருந்து உத்தியோகபூர்வமாக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்றப்பட்டது. இதனை ஆசிய கிரிக்கெட் பேரவை உறுதிப்படுத்தியது.

இலங்கையில் நிலவும் அரசியல், பொருளாதார, எரிபொருள் நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர் இலங்கையில் நடைபெறுமா என்ற கேள்விகளுக்கு மத்தியில் ஆசிய கிரிக்கெட் பேரவையின் உறுப்பினர்களுக்கிடையிலும், இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகிகளுக்கிடையிலும் நடைபெற்ற கலந்துரையாடலின் இறுதியில் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்றப்பட்டது.

எனினும், ஆசியக்கிண்ணத்தை நடத்துவதற்கான உரிமம் இலங்கையிடம் உள்ளபோதும், ஷார்ஜா மற்றும் டுபாயில் ஓகஸ்ட் 27ஆம் திகதிமுதல் செப்டெம்பர் 11ஆம் திகதிவரை தொடரை நடத்துவதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# இலங்கை உதைபந்து சம்மேளனத் தலைவர் தங்கக்கிண்ணப் போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்றா சம்பியன்

(அக்கரைப்பற்று நிருபர்)

இலங்கை உதைபந்து சம்மேளனத் தலைவர் தங்கக் கிண்ணப் போட்டியில் ஹிஜ்றா விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டம் வென்றது. சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தைப் பெற்றது. அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தங்கக்கிண்ணப் போட்டியில் ஹிஜ்றா அணி 2-0 எனும் கோல்கள் அடிப்படையில் சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனானது.

தகுதிகாண் அடிப்படையில் இடம்பெற்ற போட்டிகளில் வெள்ளிக்கிண்ணத்தை சிட்டி விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தை இறக்காமம் ஐ.ஆர்.எவ்.சி. அணியும் சுவீகரித்துக்கொண்டன. இந்தப் போட்டிகளுக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர், அதன் பொருளாளர், அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் சகி உள்ளிட்ட பல அதிதிகள் கலந்துகொண்டு கிண்ணங்களையும், நினைவுச் சின்னங்களையும் வழங்கினார்கள்.

இதன்போது அக்கரைப்பற்று பிராந்திய உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பல முன்னாள் சிரேஷ்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.







# இலங்கையர்கள் ஐவருக்கு கொரோனா!

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நேற்றிரவு கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்குபற்ற பேர்மிங்ஹாம் சென்ற இலங்கையைச் சேர்ந்த ஐவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர்கள் இருவர், அவர்களது பயிற்றுநர், கூடைப்பந்தாட்ட வீரர், றக்பி வீராங்கனை ஆகியோருக்கே இவ்வாறு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களை விட மேலும் ஐவர் கொரோனா தொற்று காரணமாக இலங்கையிலிருந்து இங்கிலாந்து செல்ல முடியாமல் போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அவர்கள் ஐவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7